இலவச வெளியீடு: GERMANY , ENGLAND பங்குனி .March.2018

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

1950 (68)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A




Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Tel:0231 162377

Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany Fax:0231 147836


## நம் நாட்டை நேசிக்கும் பற்றாளர்கள் படையணி களமிறங்கும் நேரமிது!

Dr IN





மகளிர்தின சிறப்பிதழ்
கௌரவ ஆசிரியர்
சந்திரவதனா செல்வகுமார்

யேர்மனியில் தேர்க்காலம்

எங்கள் மகளிர் தின வாழ்த்துக்கள்

## பெண் ஒரு அதிசயப்பிறவி








S.K.Silks & Gold Paraadise

16 வது ஆண்டு ஆரம்பத்தினை முன்னிட்டும்
தமிழ் புத்தாண்டை முன்னிட்டும்

One Day Sale!!!

MARCH 31 70% OFF

31.03.2018 Saturday

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

செல்வராஜா
Selvaraja Gold House U.K
தங்க நகைகளுக்கும், மைங்கையர் மனங்கவர் சேலைகளுக்கும்,நாடுங்கள்.
Page.02

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 Germany
Page.9

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.29




**தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்**

**வுப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி 05.05.2018 Hünefeld Str 63b, 0202 479 60 17
தேர் 19.05.2018 42282 Wuppertal

**யுலிச் ஸ்ரீ நவசக்திவிநாயகர் ஆலயம்**
கொடி 26.05.2018 Hoch Str 10b 02164 7020 944
தேர் 03.06.2018 41363 Jüchen

**சுட்காட் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
கொடி 02.06.2018 Lehmfeld Str 18 0711 67 393 522
தேர் 10.06.2018 70374 Suuttgart.

**ஹம் ஸ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலயம்**
கொடி 11.06.2018 Siegenbeck Str 04-05 02388 302 223
தேர் 24.06.2018 59071 Hamm.

**டோட்முண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
கொடி 11.06.2018 Kiefer Str 24 0231 72 51 51 65
தேர் 24.06.2018 44225 Dortmund.

**பிராங்போட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி 17.06.2018 Adelbert Str 61-63 069 979 45 618
தேர் 30.06.2018 60486 Frankfurt/M

**கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணிஅம்பாள் ஆலயம்**
கொடி 23.06.2018 Girmesgath 95 02151 565 00 45
தேர் 01.07.2018 47803 Krefeld.

**கொமஸ்பாக் ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
கொடி 23.06.2018. Industrie Str 7 02261 913 133
தேர் 01.07.2018 51643 Gummersbach.

**எசன் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்**
கொடி 07.07.2018 Kloster Str 49a 0201 806 74 33
தேர் 15.07.2018 45149 Essen.

**ஹம் ஸ்ரீ திருநல்லூர் ஆறுமுகவேலழகர் ஆலயம்**
கொடி 14.07.2018 Roon Str 2a 02381 291 03
தேர் 22.07.2018 59065 Hamm.

**கிஸ்கெம் ரெக் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் ஆலயம்**
உற்சவம் 14.07.2018 Alleen Str 18-20 07021 807 43 99
தேர் 22.07.2018 73230 Kirchheim u.Teck

**சுட்காட் ஸ்ரீ விநாயகர் ஆலயம்**
கொடி 20.07.2018 Waiblinger Str 30 0711 11 3281
தேர் 29.07.2018 70372 Stuttgart.

**சுவெட்ரா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி 21.07.2018 Robertkoch Str 5a 02304 16721
தேர் 29.07.2018 58239 Schwerte.

**ஹம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்**
கொடி 28.07.2018 Ferdinand Poggel Str 25 02381 162 686
தேர் 05.08.2018 59065 Hamm.

**ஹனோபர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்**
கொடி 10.08.2018 Carl-Buderus Str 3a> 0511 471 149
தேர் 18.08.2018 30455 Hannover.

**பெர்லின் ஸ்ரீ மயூரபதி முருகன் ஆலயம்**
கொடி 16.08.2018 Blaschko Allee 48 030 694 6900
தேர் 08.09.2018 12355 Berlin.

## பொறுப்புடனும், பொறுமையுடனும் ஆற்றிய பணிக்கு வெற்றிமணியின் நன்றி



யேர்மனியில் தேர்க்காலம் என்ற பகுதியில் யேர்மனியில் அமைந்துள்ள பல இந்து ஆலயங்களின் தேர் உற்சவகாலமும் ஆலயத்தின் முகவரி தொலைபேசி இலக்கம் என்பன தரப் பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இவற்றை சேகரித்தபோது இருந்த தொலைபேசி இலக்கம் சில மாற்றம் அடைந்துள்ளது. இவ்வருடம் அவற்றைப் பெற்று இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.
யேர்மனியில் தேர்க்காலம் என்ற பகுதி வெற்றிமணி வருடத்தில் பங்குனிமாதம் முடிந்தவரை முழுமையாக முழுப்பக்கம் இலவசமாக பிரசுரிக்கின்றது.
இந்த அரிய பணியினை வெற்றிமணிக்கு செய்து தருபவர் ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன் அவர்கள். தொலைபேசி எத்தனை தடவை எடுக்கவேண்டும், எவருடன் தொடர்பு கொள்ள வேண்டும், இப்படி பல பொறுப்பான சேவையை தம்பி.புவனேந்திரன் அவர்கள் பொறுமையுடனும், பொறுப்புடனும், செய்து முடிக்கிறார். அவர்களுக்கு வெற்றிமணியின் நன்றி.

ஆன்மிகத் தென்றல் த.புவனேந்திரன் :Tel:0172 8342 116







வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 258



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

மகளிர்தின சிறப்பிதழ்
கௌரவ ஆசிரியர்
சந்திரவதனா செல்வகுமார்



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


**மகளிர்தின சிறப்பிதழ்**




கௌரவ ஆசிரியர்
சந்திரவதனா செல்வகுமார்

பங்குனி 08 மகளிர்தினம். இத்தினத்தை முன்னிட்டு வெற்றிமணி பங்குனிமாத இதழை மகளிர்தின சிறப்பிதழாகவும். இன்று புலம்பெயர் நாட்டில் சிறந்த எழுத்தாளராக, சமூகசிந்தை, மனிதநேயம், மிக்க பெண் எழுத்தாளர்களில் ஒருவரை இம்மாதம் வெற்றிமணியின் கௌரவ ஆசிரியராக நியமித்து கௌரவிக்கின்றது. இக் கௌரவத்தை பெறுபவர் திருமதி.சந்திரவதனா செல்வகுமார் அவர்கள்.

இவர் தான் சொல்ல வந்த பொருளை எவருக்காவும் மறைக்காது துணிச்சலுடன் வெளிப்படுத்தும் தன்மைகொண்ட சிறந்த எழுத்தாளர். ஒரு பெண் எழுத்தாளர் சாதாரணமாக எதிர்நோக்கும் சிக்கலில் எல்லாம் சிக்காமல் எல்லாவற்றையும் யதார்த்தம் என்ற அம்பினால் தகர்த்து வெற்றி காண்பவர். இவரது எழுத்துக்களை வாசிக்கும் போது அவற்றில் எதோ ஒரு பகுதி எமதுவாழ்வில் கடந்துபோன உணர்வை மீட்டிச்செல்லும். ஒரு தலைசிறந்த எழுத்தாளரை சிந்தனையாளரை வெற்றிமணி பங்குனி இதழின் கௌரவ ஆசிரியராக கௌரவிப்பதில் பெருமிதம் கொள்கிறது.

# காதலினால் அல்ல

**சந்திரவதனா**



புள்ளிகளை மட்டுந்தான் எங்களால் போட முடிகிறது. எந்தெந்தப் புள்ளிகள் இணைந்து எந்த வடிவில் வாழ்க்கைக் கோலம் அமையப் போகின்றது என்பதை யாரும் முற்கூட்டியே உணர்ந்து கொள்வதாகவோ அறிந்து கொள்வதாகவோ எனக்குத் தெரியவில்லை.

நேற்றுத்தான் போலிருக்கிறது. நீ ஜேர்மனிக்கு வந்தது. நான்கு வருடங்களின் முன் வந்திருந்தாய். பார்த்துப் பேசும் பாக்கியம்தான் எனக்கில்லாமற் போய் விட்டது. பார்க்காமலே இருந்து விடுவோம் என்றாய். பால்ய காலத்து முகங்களையே மனங்களில் வார்த்திருப்போம் என்றாய்.

,ன்றைக்கு ஏன் இதெல்லாம் என் நினைவில் வருகின்ற தென்றே எனக்குத் தெரியவில்லை. இரவின் நிசப்தங் களைக் குலைக்கும் ஒவ்வொரு சப்தங்களும் எனக்குக் கேட்கின்றன. ஆழ்ந்து உறங்கிப் போகும் நான் ஏன் இப்படி அர்த்த ராத்திரியில் அர்த்தமற்று விழித்திருக்கிறேன் என்று புரியவில்லை. மனசு குழம்புகிறது. எதையோ இழந்தது போலத் தவிக்கிறது. ´எனக்குப் பிரியமான யாருக்கும் ஏதாவது ஆகியிருக் குமோ..?´ இருட்டுக்குள் நடந்து வரும் போது தூரத்தே தெரியும் வேப்பமரத்தில் ´பேய் இருக்குமோ!´ என்ற நினைவு வந்தவுடன் குடல் தெறிக்க ஓடும் சின்னப்பிள்ளை போல, கேள்வி தோன்றிய மாத்திரத்தில் மனசு சில்லிடுகிறது. ´வேண்டாம், எந்த அசம்பாவிதங்களும் வேண்டாம். இதற்கு மேல் யாரையும் இழக்கவோ, யாரும் எதையாவது இழந்து விட்டார்கள் என்று கேட்கவோ இந்த மனசுக்குத் திராணியில்லை.´ நினைவுகளிலிருந்து விலகி ஓடுகிறேன்.

வேப்பமரத்துக்குப் பயந்து ஓட, வளைவில் தெரியும் முடக்குக் காணிக்குள் விருட்சமாய் விரிந்திருக்கும் புளியமரம் மீண்டும் பேயை நினைவு படுத்துவது போல் எனக்குள்ளும் வேண்டாத நினைவுகள் வந்து என்னைப் பயமுறுத்துகின்றன. குடல் தெறிக்க ஓடுகிறேன்.

´இல்லை, யாருக்கும் ஒன்று நடந்து விடாது. எனக்கு நித்திரை வராததற்கான காரணம் வேறாக இருக்க வேண்டும்.´ இரவிலே உடற்பயிற்சி செய்வது அவ்வளவு நல்லதல்ல, என்று ராகினி பலதடவைகள் சொல்லி யிருக்கிறாள். இருந்தும் வேலை முடிந்த பின் ரெட்மில்லரில் 45நிமிடங்கள் ஓடிவிட்டுத்தான் வீட்டுக்கு வந்தேன். அதனால்தான் நித்திரை கொள்ள முடியவில்லைப் போலும். என்னதான் சமாதானம் செய்தாலும், ஏனோ சில நாட்களாகவே மனம் குழம்பித்தான் இருக்கிறது. இன்று கொஞ்சம் அதிகப் படியாக. என்னவென்று புரியாத உணர்த்தல்கள். அடிக்கடி விழிப்பு. படுத்ததும் தூங்கி விடும் என் இயல்பு நிலையில் இருந்து விலகியிருக்கிறேன். ஏதோ ஒரு யோசனை என்னை அழுத்துகிறது. ஏன் இந்த உணர்வுகள் என்ற கேள்வி இந்தச் சில நாட்களுக்குள் பலதடவைகள் எனக்குள் எழுந்து விட்டது. ஆனாலும் ஐரோப்பிய அவசரங்களினூடு என் நாட்களும் விரைகின்றன.

ம்.. மீண்டும் நீ.. ஏன் என் நினைவுகளில் வருகிறாய். மனத்திரையில் வலம் வரும் பலநூறு முகங்களுக்கு இடையில் நீ கொஞ்சம் அதிகமாகவே வருகிறாய் போலி ருக்கிறது. அடிக்கடி வருகிறாய். இந்தச் சில நாட்களுக்குள் உன்னை இன்னும் அதிகமாக நினைக் கிறேன் போல இருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் ஏதோ ஒரு உந்துதலில் உனது மகளுக்கு ஒரு மின்னஞ்சல் எழுதினேன். உனதும், உன் மனைவியினதும் புகைப்படம் ஒன்று எனக்கு அனுப்பும் படி. அவள் பதிலுக்காக இன்னும் என் மனம் காத்திருக்கிறது.


ஏனோ, உன்னைப் பார்க்க வேண்டும் போல மனதுள் ஆவல் எழுகிறது. மனங்களின் தொடுகைகளைத் தவிர வேறெந்தத் தொடர்பும் இல்லாத தூரத்தில் நீ. உறவினன் என்பதையும் தாண்டிய ஏதோ ஒரு பிரியம் உன் மேல். எனக்கு உன் மேல் இருக்கும் பிரியத்தை விட உனக்கு என் மேல் இருக்கும் பிரியம் அதிகம் என்பதை நான்கு வருடங்களின் முன் நீ ஜேர்மனிக்கு வந்த போது தொலைபேசியில் பேசிய போதுதான் உணர்ந்தேன். அப்போதும் கூட நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவில்லை. தொலைபேசி என்ற ஒரு சாதனம் இருந்ததால் பேசிக் கொண்டோம்.

அன்று மிகச் சாதாரணப் பெண்கள் போலவே நூறில் ஒன்றாய், இல்லையில்லை ஆயிரத்தில் ஒன்றாய், அதை விடப் பொருத்தமாய் உலகத்தில் ஒன்றாய்... சமையல் முடித்து, சாப்பாடு முடித்து, கொஞ்சம் முன்னேற்றமாய், மினுக்கிக் கழுவி மினைக்கெடாமல் பாத்திரங்களை டிஸ்வோசரில் போட்டு விட்டு, துடைப்பத்துக்குப் பதிலாக வக்கும் கிளீனரை எடுத்த போதுதான் தொடர்ச்சி 4ம் பக்கம்




## காதலினால் அல்ல

03ம் பக்கத் தொடர்ச்சி



உனது தொலைபேசி என்னை அழைத்தது. யாராவது தொல்லை பேசுபவர்கள்தான் அழைக்கிறார்களோ என்ற யோசனையில் மனசுக்குள் சலனித்து விட்டுத்தான் எடுத்தேன்.

என்னை முழுமையாகச் சலனப்பட வைக்க என்றே கனடாவில் இருந்து வந்தாயோ! என்னமாய் பேசி விட்டாய். மீண்டும் மீண்டுமாய் எனக்குள்ளே அவை ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. நினைவுகளில் மிதக்கின்றன. அதுக்காக காதல், கத்தரிக்காய் என்று விபரீதமாய் ஏதும் கற்பிதம் பண்ணி விடாதே. நான் இன்னொருத்தன் மனைவி. நீ இன்னொருத்தியின் கணவன். சத்தியமாய் உன் மேல் எனக்குக் காதலில்லை. ஆனாலும் என்னைச் சலனப் படுத்துகிறாய். சற்று சஞ்சலப் படுத்துகிறாய். ஒரு வேளை உன் காதலை அன்றே நீ சொல்லியிருந்தால் நானும் உன்னைக் காதலித்திருப்பேனோ, என்னவோ..!
எனக்கென்ன தெரியும்? நீ என்னைக் காதலித்தாய் என்று நான் எங்கு கண்டேன்? பனங்கூடல் தாண்டி, அப்பாவோடு நான் உன் வீட்டுக்கு வரும் போதெல்லாம், மச்சான் நீ என்றும், உன்னை மணப்பது நான் என்றும் அப்பாச்சி சொல்லும் போதெல்லாம் எனக்கேதோ மரப்பாச்சி விளையாட்டுப் போலத்தான் இக்கும். திருமணத்தின் அர்த்தமோ, காதலின் சந்தமோ தெரியாத அந்த வயதில் அரைக் காற்சட்டைக்கு வெளியே அரைநாண் கயிறு எட்டிப் பார்க்க விளையாடிக் கொண்டிருக்கும் உன் மீது எனக்கு எந்த ஈடுபாடுமே வரவில்லை. காதல் மட்டும் எப்படி வரும்? அப்படியிருக்க அப்பாச்சியின் வார்த்தைகள் உன்னுள் ஆழப் பதிந்து போனதையும், நான் உனக்குத்தான் என்ற ஆசை உன்னுள் வேரூன்றி வளர்ந்து விட்டதையும் நான் எப்படி அறிவேன். ஒரு தரமாவது, நான் வளர்ந்த பின்னாவது நீ எனக்குச் சொல்லியிருக்கலாமே.

நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும் நேரங்களில் நீ சந்திக்கடையின் முன் ஒற்றைக்காலைத் தரையில் ஊன்றிய படி, மற்றக்கால் தொங்கிக் கொண்டு நிற்க சைக்கிளில் தவமிருந்தது எனக்காகத்தான் என்று நான் நினைக்கவேயில்லை. நீ சொன்ன போதுதான் நீ சந்தியில் நின்றதைப் பற்றியே நினைத்துப் பார்க்கிறேன். நீ கப்பலில் போய் விட்டாய் என்ற போது மாமியின் கஸ்டங்கள் தீர்ந்து விடும் என்று மனம் மகிழ்ந்தேனே தவிர வேறெந்த உணர்வும் எனக்கு வரவில்லை. நீ மட்டும் எப்படி உனக்குள் அப்படியொரு கனவை வளர்த்துக் கொண்டு திரும்பி வந்தாய். அங்கிருந்தாவது உன் விருப்பத்தை, ஆசையை, காதலைச் சொல்லி ஒரு கடிதம் எழுதியிருந்திருக்கலாமே! ம்... அதற்கு நான்தான் அவகாசம் தரவில்லையோ!

சில வருடங்கள் கழித்து, நீ கப்பலில் ,ருந்து திரும்பி வந்த அன்றே என்னைப் பார்க்க என்று ஒடி வந்ததாய் சொன்னாயே! அப்போது கூட "மாமி..." என்றுதானே கூப்பிட்டுக் கொண்டு வந்தாய். அம்மா மீது உனக்கு அத்தனை பாசம் என்றுதான் நினைத்தேனே தவிர, உன் வரவு எனக்குள் எந்த சந்தத்தையும் ஏற்படுத்தவில்லை. நான் என்பாட்டில் என் குழந்தையை மடியில் வைத்து பால் கொடுத்துக் கொண்டிருந்தேன். அந்தக் காட்சியில் உன் மனம் நொருங்கிப் போனதைக் கூட நீ யாருக்கும் அன்று சொல்லவில்லையே!
இத்தனை வருடங்கள் கழித்து, நான் பேரப்பிள்ளையையும் கண்ட பின் ,தையெல்லாம் நீ என்னிடம் சொன்ன போது எனக்கு ஏதோ சினிமாப் படத்துக்கான கதையொன்றைக் கேட்பது போன்ற பிரமைதான் வந்தது. என்ன..? ஒரு வித்தியாசம். வழமையான கதைகளில் நான் வாசகியாய் அல்லது ரசிகையாய் இருப்பேன். இந்தக் கதையில் நானே கதாயநாயகியாய்.

நீ ஜேர்மனிக்கு வந்திருந்த போதும், நான் வர முடியாது போன அந்தக் குடும்பச் சந்திப்பில் ஒவ்வொரு அழைப்பு மணியின் போதும் நான்தான் வருகிறேன் என்று எதிர்பார்த்து ஏமாந்தாயாமே! அங்கு வந்திருந்த உறவுகளில் சிலர் என்னிடம் பின்னர் சொன்ன போது நியமாகவே நான் வருந்தினேன். வந்திருக்கலாமே என்று மனசுக்குள் ஆதங்கப் பட்டேன். ஆனாலும் பார்க்காமலே இருந்து விடுவோம் என்றும், பால்ய காலத்து முகங்களையே மனதில் வார்த்திருப்போம் என்றும் நீ சொல்லிச் சென்றதை நினைத்து மனத்தை ஆற்றிக் கொண்டேன். எனது 18வயதுக்குப் பிறகு உன்னைச் சந்தித்துக் கொண்டதாய் எனக்கு ஞாபகம் இல்லை. எனது அந்த வயது முகத்தைத்தான் உனக்குத் தெரியும். அதே போல நான் கடைசியாகச் சந்தித்த உனது அந்த 23வயது முகத்தைத்தான் எனக்கும் தெரியும்.

இப்போதும் கூட உன் மனைவி வேலைக்கும், மகள் பாடசாலைக்கும் சென்ற பின்னான தனிமைப் பொழுதுகளில் நீ என்னைப் பற்றிய நினைவுகளில் மூழ்குவாய் என்று சொன்னாயே! அது அவ்வப்போதான தனிமைப் பொழுதுகளில் என் நினைவுகளைச் சீண்டுவதை நான் உணர்கிறேன். அதற்காக எனக்கு உன்மேல் காதல் இருக்கிறது என்று மட்டும் நினைத்து விடாதே. இப்போதும் சொல்கிறேன், சத்தியமாக உன் மேல் எனக்குக் காதல் இல்லை. ஆனாலும் வாழ்க்கை பற்றிய விடை கிடைக்காத சில பல கேள்விகள் என்னுள் எழுகின்றன. பெரியவர்கள் போட்ட புள்ளிகள் உன் மனதில் மட்டும் கனவுக் கோலமானது ஏன்? என்னை நீ நினைத்ததையும், என்னை நீ காதலித்ததையும் உணராமலேயே நான் வேறொருவனைக் காதலித்து, கல்யாணம் செய்து, என்பாட்டில் வாழ்ந்திருக்கிறேனே! சின்ன உணர்த்தல்கள் கூட என்னிடம் இல்லாமற் போனது எப்படி?

மீண்டும் மீண்டுமாய் இந்த உன் பற்றிய நினைவுகள் ஏன் வருகின்றன என்று தெரியாமலே நான் தூங்கி விட்டேன் போலிருக்கிறது. விடிந்த பொழுதிலும் மனசு குழம்பித்தான் இருக்கிறது. எனக்குப் பிரியமான யாருக்கும் ஏதாவது ஆகியிருக்குமோ? நினைக்கும் போதே வாயில் வைக்கக் கொண்டு போன உணவு நழுவி விழுந்து விடுகிறது. என் மேல் பிரியமான யாருக்காவது..? கேள்விகள் தோன்றுவதும் வழமை போலவே எனக்குள்ளேயே அமுங்கிப் போவதுமாய் பொழுது அவசரத்தோடு விரைகிறது. வேலையிலும் மனதில் அமைதியில்லை. வேளைக்கே வீட்டுக்கு வந்து விட வேண்டும் போல மனசு அந்தரிக்கிறது. வந்து விட்டேன். அப்போதுதான் அந்த அழைப்பு. நீ ஒரு மருத்துவமனையில் கடுமையான நோயில் வீழ்ந்திருக்கிறாய் என்ற செய்தியோடு.

ஒரு கணம் திக்குமுக்காடி விட்டேன். எப்படியாவது உன்னோடு பேச வேண்டும் என்று மனம் துடிக்கிறது. நன்றாகக் கதைத்துக் கொண்டுதான் இருக்கிறாய் என்றும் மருத்துவமனை என்பதால் இரவு பேச முடியாது என்றும் காலையில் பேசும் படியும் சொல்கிறார்கள். சிறிது நேரத்தில் மருத்துவமனைக்கான தொலைபேசி இலக்கத்தைத் தருகிறோம் என்கிறார்கள்.

மனசுக்குள் அலை புரள்கிறது. விழிகளில் நீர் திரள்கிறது. ஆனாலும் உன்னோடு பேசலாம் என்ற நம்பிக்கை என்னுள் பலமாக இருக்கிறது. அதிகம் காத்திருக்க வைக்காமல் தொலைபேசி அழைக்கிறது. எடுத்த போது, எனது நம்பிக்கைகள் தவிடு பொடியாகின்றன. நீ போய் விட்டாயாம். அப்போதுதான், அந்தச் சில நிமிடங்களுக்குள்தான். என்னோடு பேசாமலே போய் விட்டாயாம். சொன்னது போலவே பார்க்காமலே போய் விட்டாய்.

ஒப்பாரி வைத்து அழுகின்ற அளவுக்கு இப்போது நான் இல்லை. ஆனாலும் அவ்வப்போதான தேற்றுவார் இன்றிய தனிமைகளில் ஆற்றாமையில் கொட்டி விடுகிறது கண்ணீர்.




Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Luckyfly
July 25-26
Aug.1,2,3
699€ + 40 kg
04,05,06,July 669 € + 40 kg
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
e.mail:siva 0108 @hotmail.com
Graphic Design Vettimany Ltd
Mob:No: 0179 1484 892
QATAR
Emirates
طيران الخليج
الطيران العماني
OMAN AIR
Allee Str.38-40a
44793 Bochum


லயம் நுண்கலைக் கழகம் ஸ்ருட்காட் ஜேர்மனி பெருமையுடன் வழங்கும்
"இசை மழை 2018"
24.03.2018 சனிக்கிழமை 15:00 மணிக்கு
உலக ஈழதமிழரை தன் இசையால் வசமாக்கிய "ஈழத்து இசைப்புயல்" இசையமைப்பாளர் திரு இசைப்பிரியன் அவர்களின் நேரடி நெறியாள்கையில் எமது 35க்கு மேமேற்பட்ட மாணவர்கள் இசையமைக்க பிரபலமான தாயகப்பாடகர்கள் பாடி உங்களை "இசை மழை 2018" நனைவிக்க இருக்கிறார்கள்.
திரு.இசைப்பிரியன்
தில்லானா நடனாலய இயக்குனர் திரு.கு அனுசான் அவர்கள் பயிற்றுவித்த எமது லயம் நுண்கலைக் கழக மாணவர்களின் நடனம்
திரு.கு அனுசான்
திரு.நடராசா சத்தியகிரி
Vaihingen Stuttgart நகரில்
மண்டபம்:
Katzenbach str 27
70563 Stuttgart
பிரவேசச் சீட்டு மண்டபவாயில் பெற்றுக்கொள்ளலாம்.
விழா மண்டபத்தில் உங்கள் அபிமான உணவகம் யேர்மனி-சென்னைத் தோசை
இளையோரின் உள்ளங்களை கொள்ளை கொண்ட நகைச்சுவை புயல் திரு டானியல் யோகதாஸ் ரூ திருமதி யோகதாஸ் ( Angry Mom ) இணைந்து வழங்கும் நகைச்சுவை கதம்பமும் நடைபெறும்.
சிறப்பு விருந்தினர்கள்
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் வெற்றிமணி ஆசிரியர்
மதுரக் குரலோன் திரு.S.கண்ணன்
ANGRY MUM
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
லயம் நுண்கலைக் கழகம் ஜேர்மனி ஸ்ருட்காட்.
தொடர்புக்கு: நடராசா சத்தியகிரி (நிர்வாகி) லயம் நுண்கலைக் கழகம் ஜேர்மனி
004915781777632


Jasmine Silk House
புதிய டிசைன்கள் புதியவரவுகளுடன் புதுவருட
மலிவு விற்பனை!
16.03.2018 முதல்
14.04.2018 வரை
இங்கு பார்க்கும் ஆடைகள் யாவும் நம் கையிருப்பில்....
SPECIAL OFFER
Fester Str.50
40882 Ratingen
Tel:02102 844 744
0173 1937 325

SANGEETHA JEWELLERS

"Specialist in 22 ct Gold Jewellery UK"

செல்வ வளம் தரும் **அட்சய திரித்திகை** யில் சங்கீதாவின் அசத்தலான

**Grand Sale**

மனசுக்கு நிறைவான பரிசு பொருட்களும் வழங்கப்படும்.

**18,19,April.2018**



MONTHLY SEETU FACILITIES
ONSITE WORK SHOP REPAIRS AND
ALL OTHER NEEDS
EXCHANGE YOUR OLD FOR NEW JEWELLERY

தங்கத் தாரகைக்கு
ஓர் தாலிக்கொடி



Tel:020 8902 9246

சங்கீதா நகையகம்

190 EALING ROAD,ALPERTON,
WEMBLEY,HA0 4QD - U.K

" TERMS AND CONDITION APPLY"



# தலைக்கு மேல் ஆபத்து!

Dr.நிரோஷனின் **அதிசய உலகம்**

ஹாலிவுட் திரைப்படங்கள் பார்க்கும் நீங்கள், நிச்சயமாக டீப் இம்பாக்ட் (Deep Impact) அல்லது அர்மகெட்டோன் (Armageddon) போன்ற திரைப்படங்களைப் பார்த்திருப்பீர்கள். அதில் சிறுகோள் அதாவது asteroid ஒன்று பூமியைத் தாக்குவது போல் கதை இருக்கும். ஆனால், இப்படி ஒரு சிறுகோள் இன்று உண்மையிலே நமது பூமியை தாக்கினால் என்ன நடக்கும் என்று சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா?

ஒரு சிறுகோள் பூமியைத் தாக்கினால் அழிவு நிச்சயம் என்பதில் சந்தேகமே இல்லை! அதற்கு உங்கள் எல்லோருக்குமே ஒரு உதாரணம் தெரியும். 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு புவியில் விழுந்த ஒரு சிறுகோளால் தான், டைனொசோர் அனைத்துமே அழிந்தது. அது மட்டும் இல்லை, உண்மை சொல்லப்போனால் 28.10.2028ம் ஆண்டில் கூட 1997XF11 என்று பெயர் வைக்கப்பட்ட ஒரு சிறுகோள் புவிக்கு மிகவும் அருகே வரப்போகிறது என்று விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

எனவே அந்தச் சிறுகோள் போன்ற ஒரு சிறுகோள் நமது புவியில் விழுந்தால் எப்படி இருக்கும் தெரியுமா? ஒரு 1 மில்லியன் மெகா டொன் உள்ள வெடிகுண்டு வெடித்தது போல் இருக்கும். சரி, இதை உங்களால் கற்பனை பண்ண முடியவில்லை, அது எனக்குப் புரிகிறது, எனவே இந்த விஷயத்தைப் புரியும்படி கொஞ்சம் சிறிதாகவே ஆரம்பிப்போம். உதாரணமாக ஒரு சராசரி வீட்டின் அளவைக் கொண்ட ஒரு சிறுகோள் மணித்தியாலத்திற்கு 50,000 km வேகத்தில் புவியில் வந்து விழுகிறது என்று எடுத்துக்கொள்வோம், அப்படி விழுந்தால் ஒரு 20 கிலோ டொன் வெடிகுண்டு, அதாவது ஹிரோஷிமாவில் விழுந்த அணுகுண்டு வெடித்தது போல் இருக்கும். எனவே, அப்படி ஒரு சிறுகோள் ஒரு நகரத்தையே அழிக்கக்கூடிய சக்தியைக் கொண்டிருக்கிறது. இதுவே ஒரு 20 மாடிக்கட்டடம் அளவில் இருக்கின்ற ஒரு சிறுகோள் நமது பூமியைத் தாக்கினால், 25-50 மெகாடொன் வெடிகுண்டு வெடித்தது போல் இருக்கும். அது விழுந்த இடத்தில் இருந்து 8 km சுற்றளவில் இருக்கும் அனைத்தையுமே உடனடியாக அழித்துவிடும்.

நண்பர்களே, இதில் உள்ள பயங்கரமான விஷயம் என்ன தெரியுமா? விண்வெளியில் இதை விட எவ்வளவோ பெரிய சிறுகோள்கள் உள்ளன. உதாரணத்திற்கு 1 $km^3$ அளவில் இருக்கும் ஒரு சிறுகோள் நமது பூமியில் விழுந்தால், அது நான் ஆரம்பத்தில் கூறிய 1,000,000 மெகா டொன் வெடிகுண்டு வெடித்தது போல் இருக்கும். அதாவது 10-50 மில்லியன் ஹிரோஷிமா அணுகுண்டுகள் ஒரே நேரத்தில் வெடித்தது போல் இருக்கும். அப்படி வெடித்தால் 350 km சுற்றளவில் உள்ள அனைத்தும் அடுத்த நொடியே அழிந்து விட்டு, அதை விட 1,500 km சுற்றளவுக்குச் சேதமும் ஏற்படும். இது எல்லாமே போதாதென்று, இந்த வெடிப்பால் ஏற்படும் தூசி, நமது புவியின் வளிமண்டலத்துடன் கலந்து சூரிய ஒளி நமது புவியை வந்து சேரமுடியாத அளவிற்கு மறைத்துவிடும். இதனால் ஏற்படும் விளைவு என்ன தெரியுமா? சூரிய ஒளி இல்லையென்றால், இந்தப் புவியில் ஒன்றுமே வாழ முடியாது! எனவே இந்தப் பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களும் அழிந்துவிடும்.

கேட்கவே பயங்கரமாகத் தான் இருக்கிறது, இல்லையா? எனவே, புவியில் இப்படி ஒரு பெரிய சிறுகோள் விழுந்தால் அழிவு நிச்சயம் என்பதில் சந்தேகமே இல்லை. அந்தச் சிறுகோளின் அளவைப் பொறுத்துத் தான் அழிவு எவ்வளவு பெரிய அழிவு என்பது தெரியவரும். இருந்தாலும் பயப்பட வேண்டாம், நண்பர்களே! புவியை நோக்கி வரும் ஒரு சிறுகோளை அழிப்பதற்கும், திசை திருப்பி விடுவதற்கும் கூட சில திட்டங்களை ஆராய்ச்சியாளர்கள் வைத்துள்ளனர். உதாரணத்திற்கு இங்கே இருந்து ஒரு அணுகுண்டை ஏவூர்தியில் (Rocket) அனுப்பி அதை வெடிக்க வைத்து, அந்தச் சிறுகோளின் திசையைத் திருப்பலாம் என்று பல விதமான முறைகளைச் சிந்தித்து வைத்திருக்கிறார்கள். அது சாத்தியமா இல்லையா என்பது தான் தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்!

சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள், சிறுகோள் ஒன்று நமது பூமிய்ய நோக்கி வந்தால் என்ன செய்வீர்கள்?

# இலவசமாக வைரம் வேண்டுமா?





அடுத்த காதலர் தினத்திற்கு உங்கள் காதலிக்கு என்ன பரிசினை வாங்கிக் கொடுக்கப் போகின்றீர்கள்? ஒரு வைரக்கல் பதித்த மோதிரத்தை வாங்கிக் கொடுத்து விட்டால் நிச்சயமாக சந்தோஷப் படுவார், இல்லையா? அதுவும் உங்களுக்கு ஒரு செலவுமே இல்லாமல் இலவசமாக ஒரு வைரக்கல் கிடைக்குமென்றால் சந்தோஷத்திற்கு எல்லையே கிடையாது, அல்லவா? அட, வைரைக்கற்களை இலவசமாக யார் தரப் போகின்றார்கள் என்று தானே கேட்கின்றீர்கள். இலவசமாக நிச்சயமாகப் பெறலாம். அது எப்படி என்று கேட்கின்றீர்களா? சொல்கிறேன்...

நீங்கள் என்ன தான் தலைகீழாக நின்றாலும் இங்கே, அதாவது பூமியில் 1 கிராம் வைரம் *கூட இலவசமாகக் கிடைக்கப்போவதில்லை. அப்படி இங்கே ஒரு அழகான வைரக்கல்லை நீங்கள் எடுத்தாலும் அது லூசி என்றும் அழைக்கப்படும் வைரக்கல் போல் இருக்கவே இருக்காது. அடடா, அது யார் லூசி எனும் அழகி என்று தானே கேட்கிறீர்கள்? லூசி என்பது வேறு யாரும் இல்லை BPM37093 என்றும் அழைக்கப்படும் ஒரு வெண் குறுமீன் (white dwarf star) ஆகும். பொதுவாக விண்வெளியில் காணப்படும் ஒரு நட்சத்திரம் தனது இறுதிக் காலகட்டத்தை அடைந்ததும் அந்த நட்சத்திரத்தை வெண் குறுமீன் என்று அழைப்பார்கள். இது போலத் தான் இந்த லூசியும் கூட ஒரு வெண் குறுமீன் ஆகும்.

ஆனால் இந்த லூசியில் இருக்கும் விசேஷம் என்ன தெரியுமா? இது சும்மா வெண் குறுமீன் இல்லை. இதன் கரு ஓர் பெரும் வைரக்கல்லாக அமைந்திருக்கின்றது. ஆம் ஆம் முற்றிலும் வைரத்தாலான கரு! அதுவும் சும்மா வைரம் இல்லை, சுமார் 4000 km விட்டத்தைக் கொண்ட வைரம் ஆகும். இது போதாது என்று இந்த வைரக்கல் சுமார் 10.000.000.000.000.000.000.000.000.000.000 கரட் (carat) கொண்டது. உங்களுக்கு ஒரு கரட் என்றால் எவ்வளவு என்று தெரியுமா? 1 கரட் சரியாக 0.2 கிராமுக்குச் சமம், அப்படி என்றால் இந்த வைரக்கல்லின் நிறை சுமார் 2.000.000.000.000.000.000.000.000.000.000 மப ஆகும். இதைப் பார்க்கவே தலை சுத்தவில்லையா?

இவ்வளவு பெரிய வைரக்கல் ஒன்று விண்வெளியில் உள்ளது, அதுவும் இலவசமாக! ஆனால் இதில் இருக்கும் சிக்கல் என்ன தெரியுமா? இந்த லூசி பூமியில் இருந்து 50 ஒளியாண்டு தூரத்தில் இருக்கிறது. 50 ஒளியாண்டு என்றால் 4.7302642 × 10^14 km = 473.026.420.000.000 km ஆகும். அடடா, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே...?!

இனி நீங்கள் கூறுங்கள் நண்பர்களே, லூசி பற்றி நீங்கள் முன்பே அறிந்துள்ளீர்களா? இதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில; (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளோம்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de

# உயர்வான சிந்தனையும் எளிமையான வாழ்வும்

ஜூட் பிரகாஷ் [மெல்பேர்ண்]




ஆண்டாண்டு காலமாக தமிழ் மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளிற்கு அரசியல் தீர்வு இப்போதைக்கு கிடைக்கப் போவதில்லை! இலங்கையில் கடந்த வாரம் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் உரத்துச் சொல்லும் செய்தி இதுவாகத் தானிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு, ஊழலற்ற ஆட்சி எனும் பிரகடனங்களின் அடிப்படையில் ஆட்சிக்கட்டிலேறிய மைத்ரி-ரணில் அரசு.நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் கடும்போக்குவாத மகிந்த அணியிடம் கண்ட தோல்வியும் அதன் பின்விளைவுகளும், உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கும் செய்தி இதுவாகத் தானிருக்கிறது.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக நடந்த புதிய அரசியல் யாப்புருவாக்க முயற்சிகளும் இனி வரப்போகும் மாற்றங்களோடு முடக்கப்பட்டு விடும். இந்தத் தேர்தலில், வடக்கில் பலம் பெற்றுள்ள தமிழ் காங்கிரஸ், அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் பெருவாரியாக வெற்றி பெற்றாலும், தென்னிலங்கையை வழிக்கு கொண்டுவந்தோ இல்லாவிடில் பூகோள அரசியலில் புகுந்து விளையாடியோ, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் எவ்வாறு அரசியல் தீர்வு காணப்போகிறது என்பதை காலத்தின் கையில் விட்டுவிடுவோம்.

வடக்கு கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்ற வாக்குகளின் வீழ்ச்சியும், தமிழ் காங்கிரஸ் தேர்தலில் அடைந்த வெற்றியும், மீண்டும் ஒருமுறை தமிழின ஒற்றுமைக்கான அறைகூவல்களை பலதரப்புக்களிலுருந்தும் எழ வைத்திருக்கிறது. 2009 மே மாதத்தில், இன அழிப்பிற்கு உள்ளாகி, லட்சக்கணக்கான மக்கள் மனிக் முகாமில் அடைபட்டு, ஆயிரக்கணக்கான போராளிகள் சிறைப்பிடிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டு, ஒரு அவலமான நிலையில் இருந்த போதும் வராத ஒற்றுமையா, ஒரு தேர்தல் முடிவின் பின் வரப்போகிறது ?

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பதிவான பல தரமான பதிவுகளில் எண்ணத்தைத் தூண்டிய ஒரு பதிவு, குருபரன் குமாரவடிவேலுடையது. நேர்த்தியான சிந்தனையும் அதனை அழகாக வெளிப்படுத்தும் ஆற்றலும் குருபரனிடம் நிறைந்து கிடக்கிறது. அரசியலே மூச்சாக பேசியும் எழுதியும் வந்த தம்பி குருபரனின் எண்ணத்தைத் தூண்டிய பதிவு இது தான்

"தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் உள்ளூர் சபைகளை தேசக் கட்டுமானப் பணியில் ஈடுபடுத்த வேண்டிய காலமிது. Think out of the box."

போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உடனடி நிவாரணங்களை வழங்குவதே தலையாய நோக்கம் என்ற எண்ணத்தோடு, 2013ல் பதவியேற்ற வட மாகாண சபை, தேசிய அரசியலில் சிக்குண்டு, சமூக பொருளாதார அபிவிருத்தியை புறந்தள்ளியது போல், அடுத்து வரும் கிழமைகளில் பதவியேற்கப் போகும் மாநகர சபைகளும் பிரதேச சபைகளும் அரசியலுக்கு தான் முதலிடம் கொடுக்கப் போகின்றன. அதிரடியான தீர்மானங்கள் முன்மொழிவதிலும், அடிதடிகளிலும் கைகலப்புகளிலும், நம்பிக்கையில்லா தீர்மானங்களிலும் தான் இந்த சபைகள் தங்கள் நேரத்தை செலவிடப் போகின்றன.

ஊரில் அரங்கேறப் போகும் இந்த நாடகங்களை நாங்களும் தொலைக்காட்சியிலும் சமூக வலைத்தளங்களிலும் கண்டு ரசித்துக் கொண்டு இருக்க, சத்தமேயில்லாமல் சில சிறிய தன்னார்வ நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும், சிதைந்து போயிருக்கும் நமது பொருளாதாரத்தை மீளக்கட்டியமைக்க தம்மாலான செயற்பாடுகளை செய்து கொண்டிருப்பார்கள். எந்தவித ஆர்ப்பாட்டமுமில்லாமல் சிறியளவில் தாயகத்தில் முளைவிடத் தொடங்கியிருக்கும் இந்த முயற்சிகளை பிரபல்யப்படுத்துவது, அந்த முயற்சிகளை பாழடிப்பதாகவே அமையும்.

தமிழர் தாயகப் பகுதிகள் பொருளாதார ரீதியில் இலங்கைத் தீவில் பின்தங்கிய பகுதிகளாகவே விளங்குகின்றன. கடந்த பத்தாண்டுகளிற்கு மேலாக இலங்கை நாட்டின் per capita GDP அடிப்படையில், அது ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக கருதப்படுவதால், முந்தைய காலங்களைப் போல் இலங்கைக்கு வெளிநாட்டு நிதியுதவிகள் அதிகளவில் கிடைப்பதில்லை. இன்னொரு வகையில் பார்த்தால், தென்னிலங்கை அதிவேகமாக பொருளாதார ரீதியில் அடைந்த முன்னேற்றம், வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கு அத்தியாவசியத் தேவையான வெளிநாட்டு நிதியுதவிகளையும் இல்லாமல் செய்துவிட்டது.

இந்த அவலமான பின்னணியிலும், பொருளாதார அபிவிருத்தி என்ற கெட்ட சொல்லை தமிழ் அரசியல் பரப்பில் பாவிப்பதே ஒரு குற்றமாக கருதப்படுகிறது. பொருளாதார அபிவிருத்தி என்பது பென்னாம் பெரிய தொழிற்சாலைகள் கட்டிவதும், அதிவேக சாலைகள் அமைப்பதும், அதன் விளைவான சுற்றுச் சூழல் மாசுபடுதலும், கலாச்சார சீரழிவும் என்று தமிழ் சமுதாயத்தை ஒரு குறுகிய வட்டத்திற்குள் யாரோ அடைத்து வைத்துவிட்டார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

எங்களது விழுமியங்கள் அழியாது, எங்கள் கலாச்சாரத்தைப் பேணிக் கொண்டு, எங்கள் சுற்றுச்சூழலை பாதுகாத்துக் கொண்டு நாங்கள் பொருளாதார அபிவிருத்தி எனும் பாதையில் நடக்கலாம், நடக்கத் தொடங்க வேண்டும். இந்த பொருளாதார அபிவிருத்தி பயணத்திற்காக அடிப்படையாக "உயர்வான சிந்தனையும் எளிமையான வாழ்வும் (high thinking and simple living)" எனும் கருப்பொருளையும் நாங்கள் எடுத்துக் கொள்ளலாம். இந்தக் கருப்பொருள், இலாபத்தையும் முதலாளித்துவத்தையும் "கெட்ட சாமான்களாக" நோக்கும் எமது சமுதாயத்தின் எண்ணக்கருவோடு முரண்படாது பயணிக்க உதவும்.

விவசாயம், கடற்தொழில், IT தொழில்நுட்பம் மற்றும் medical & eco tourism எனும் நான்கு துறைகளை தூண்களாகக் கொண்டு எமது பொருளாதாரம் மீளக் கட்டியெழுப்பப்படலாம். கிராமங்களை மையமாகக்கொண்டு உள்ளூர் மக்களிற்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவில்ல விவசாய மற்றும் கடற்தொழில் சார்ந்த தொழில் முயற்சிகள், சுற்றுச்சூழலையும் பாதிக்காது, பெரிய முதலீடுகளிற்கும் தேவையிருக்காது.

"படிச்சு கம்பஸ் enter பண்ணி டொக்டராகோணும் இல்லாட்டி என்ஜியனாராகோணும்" என்று அன்றும் இன்றும் எங்கள் அம்மாமார் பிள்ளைகளிற்கு நிலாச்சோறு ஊட்டிக்கொண்டு தானிருக்கிறார்கள். எங்கள் ஊரில் நிறைந்திருக்கும் என்ஜினியர்களின் மண்டைகளைப் பயன்படுத்த தொழில்நுட்பம் சார்ந்த தொழிற்துறைகளும், திறமான டாக்குத்தர்மாரை நம்பி medical tourismk எங்கள் தாயக மண்ணில் நன்றாகவே விதைவிட்டு வளரும். தாயகப் பூமியெங்கும் நிறைந்திருக்கும் இயற்கை அழகை அழிக்காமல் eco tourism ம் நல்ல முறையில் நிலை கொள்ளும்.

தொடர்ச்சி 8ம் பக்கம்





# யேர்மனி - டோட்மூண்ட் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் [ சிவன் கோவில்] 13.02.2018 ஆலயத்தில் மகாசிவராத்திரி பூசை!

யேர்மனியில் பல ஆலங்களில் மகாசிவராத்திரி பூசைகள் 13.02.2018 செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றன. இங்கு யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் எழுந்தருளியிருக்கும் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தில் (சிவன் கோவில்) நடைபெற்ற மகாசிவராத்திரி நிகழ்வின் சில படத்தொகுப்பைக்காணலாம்.இலங்கைபோன்று யேர்மனியில் தமிழ்மக்கள் செறிந்து வாழவில்லை. அன்று விடுமுறைதினமும் அல்ல. இருந்தும் பல கி.மீ தூரத்தில் இருந்து நான்கு யாம பூசைகளிலும் மொத்தம் 600 க்கு மேற்பட்ட சிவனடியார்கள் கலந்து வழிபட்டமை மிகச் சிறப்பாக இருந்தது. இவர்களில் பல இளவயதினரும், யேர்மனியரும் கலந்து கொண்டது ஆனந்தமாக இருந்தது.படங்கள்: வெற்றிமணி

**உயர்வான சிந்தனையும் ...** 7ம் பக்கத் தொடர்ச்சி.

இந்த முயற்சிகள் எதுவுமே பாரியளவில் செய்ய வேண்டியதில்லை. "சிறியதும் அழகுதான் (small is also beautiful)" எனும் கருப்பொருளைத் தழுவி, சிறிய முயற்சிகளாகவே அவை முன்னெடுக்கப்படலாம். பல பல சிறிய முயற்சிகள் முளைவிடத் தொடங்க, வீட்டுக்குள் முடங்கியிருக்கும் எங்களது சமூக பொருளாதார அபிவிருத்தி சைக்கிளில் ஏறி இறக்கை கட்டி பறக்கும்.

இனி வரப்போகும் மாகாண சபைத் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் குறிவைத்து, தாயகத்தில் புதிதாய் முளைத்திருக்கும் professional politicians வேலை செய்யத் தொடங்கியிருப்பார்கள். அவர்களது நோக்கம் அடுத்த தேர்தலை வெல்வதில் குறியாய் இருக்க, சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றி சிந்திக்கவும் செயற்படவும் அவர்களுக்கு நேரம் இருக்குமோ தெரியாது. அப்படியே நேரம் இருந்தாலும், அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய ஒரு blue print தயாரிப்பதை விட, கேள்வி- பதில் எழுதுவதே அவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக தெரியலாம்.

போரின் காரணமாக புலம்பெயர்ந்து தங்களையும் பலப்படுத்திக் கொண்டு விடுதலைப் போராட்டத்திற்கும் பலம் சேர்த்த ஒரு தலைமுறை, "நாட்டிற்கு ஏதாவது செய்ய வேண்டும்" என்ற இன்னும் நிறைவேறாத வேட்கையுடன் முதுமையை நோக்கியும் மரணத்தை நோக்கியும் பயணித்துக் கொண்டிருக்கிறது. 1950களிலும் 1960களிலும் பிறந்த இந்த தலைமுறை தான், போரால் அழிவுண்ட எங்கள் தேசத்தை மீள கட்டியெழுப்ப வேண்டிய நிபுணத்துவத்தையும் நிதிவளங்களையும் தம்மகத்தே கொண்டிருக்கிறார்கள். தாயகத்தை நேசித்துக் கொண்டு, புலம்பெயர் தேசத்தில் வாழும், இந்தப் "பழசுகள் படையணியை" களமிறக்க வேண்டிய காலமிது. எங்கள் தேசத்தை ஆழமாக நேசிக்கும் இந்தத் தலைமுறைக்குப் பின்னர் வரும் தலைமுறைகள் அவர்களிற்கிருக்கும் அதேயளவு பற்றுடன் தாயகத்திற்கு உதவி செய்யப் போவதில்லை. விடுதலைப் போரிற்கு பின்னரான காலப்பகுதியில் எங்களது பலமாக விளங்கும் புலம்பெயர் சமூகத்தை, தாயக சமூகத்தையும் பொருளாதாரத்தையும் மீளவும் கட்டியெழுப்ப பயன்படுத்தப் போகிறோமா? இல்லை காலம் அவர்களையும் காவு கொள்ள விட்டு விடப்போகிறோமா?

விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்தது போல், வெளிநாடுகளிலிருந்து வரும் நிபுணர்களை ஒருங்கிணைத்து திட்டங்களை செயற்படுத்தும் கட்டமைப்புக்கள் இல்லாத இன்றைய சூழ்நிலையில், புலத்தில் வாழும் எங்கள் நிபுணர்களின் மீள்வருகையும் அவர்களின் பங்களிப்பை உள்வாங்கலும் இடம்பெறுமா?

பதவிகளை அலங்கரிக்கும் அரசியல்வாதிகளை புறந்தள்ளி விட்டு சமூக பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்புக்களை மேற்கொள்வது சாத்தியப்படுமா? அதிகாரங்கள் கையில் வைத்திருக்கும் இந்த அரசியல்வாதிகள் இந்த முன்னெடுப்புக்களிற்கு இடைஞ்சல் தராமல் இருக்க என்ன செய்வது?

உசாத்துணை: Northern Province Development: My Preferences By CV Wigneswaran



# வெளியிலை“ என்று சொல்லிக் கொண்டு இவள் “நிற்பாள்“



**Dr IN**

## மாதவிலக்கு, மதச் சடங்குகள்
### சில சிந்தனைகள்

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

பெண்களே உங்கள் மாண்பை இழிவு படுத்த இடந்தராதீர்கள்

“எப்ப ஏதாவது நல்ல காரியம் சுப காரியம் நடந்தாலும், வெளியிலை“ என்று சொல்லிக் கொண்டு இவள் “நிற்பாள்“ என்ற நக்கல் பேச்சைக் கேட்காத பெண்ணா நீங்கள்?
நிச்சயம் அதிர்ஷ்டசாலிதான்.
மாதவிடாய் என்பது வழமையாக நடைபெறும் இயற்கையான செயற்பாடு. ஆனால் பெண்கள் பலருக்கும் இடைஞ்சலாக இருப்பதை மறுக்க முடியாது. அந்த நேரத்தை சிறுநீர் கழிப்பது போல சிம்பிளாக சாதாரணமாக எடுத்துக் கொண்டு சகசமாக உலவக் கூடிய பெண்கள் ஒரு சிலர்தான்.

ஆனால் பலருக்கும் சனிட்டரி பாட்ஸ் அணிந்து கொண்டு வழமையான வீட்டு வேலைகள் செய்வதும், பணிக்குச் செல்வதும் பாரிய இடைஞ்சல், அசௌகரியம், மன உளைச்சல். அத்துடன் குருதி இழப்பினால் ஏற்படும் களைப்பும், ஹோர்மான் மாற்றங்களால் உண்டாகும் உடல், மன உபாதைகளும் தொல்லை கொடுக்கும்.
இதை புரிந்து கொண்டு ஆதரவாக நடப்பது எங்காவது ஓரிரு ஆண்கள்தான். ஏதோ தூங்குவதும் விழித்தெழுவதும் போன்ற சாதாரண நிகழ்வாக எடுத்துக் கொள்கிறார்கள். அவளுக்கு அது மாதா மாதம் வருகிறதே, அதோடை எவ்வளவு சிரமத்துடன் எல்லா வேலைகளையும் கவனிக்கிறாள் என எண்ணுவதே கிடையாது.
ஆனால் ஏதாவது மத, சமூக, காலாசார சடங்குகள் என வரும்போதுதான் அது ஆண்களின் கண்களைக் குத்தும். இதனால் ஏதாவது மங்கள காரியம் அல்லது சமயச் சடங்கு வருகிறதென்றால் முதல் தவிப்பு பெண்களுக்கே.
அடுத்த “சுகயீனம்“ எப்ப வரும் என்பதை கணக்கிட்டுப் பார்ப்பதே முதல் வேலையாக இருக்கும்.

காரியத்திற்கு சுகயீனம் இடைஞ்சலான நாள் என்றால் சுபகாரியத்தைப் பிற் போட முடியாது. மாதவிடாயை சுலபமாகப் பிற்போடலாம் என்ற “மருத்துவ ரகசியம்“ எல்லோருக்குமே இப்பொழுது அத்துப்படி.
கலியாணம், காதுகுத்து, சாமத்தியச் சடங்கு, வீடு குடிபுகுதல் முதல் எது வந்தாலும் வீட்டில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் தள்ளிப் போட வேண்டும் என்பார்கள். இது தேவைதானா? சில வேளை பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கும் கூட.
கோயில் பூசை. திருவிழா, காப்புக்கட்டு, சரஸ்வதி பூசை, எந்த விரதம் என்றாலும் கேட்கவே வேண்டாம். தள்ளிப் போட வேண்டியதாக இருக்கிறது.
மகனுக்கு கல்யாணமாம் ஆனால் தங்கச்சிக்காரிக்குத்தான் தள்ளிப் போட வேண்டுமாம்.



இது என்ன நியாயம்.
மணப்பெண்ணுக்கு
தள்ளிப் போட
வேண்டுமெனில் அது
ஒத்துக்கொள்ள வேண்டிய
விடயம்தான்.

ஆசையோடு தவமிருந்த புதுமாப்பிளைக்கு கோபம் வரும் என்பதால் மறுப்புச் சொல்ல முடியாது.ஆனால் தங்கச்சிக்கும் மாமியாருக்கும், தோழிப் பெண்ணுக்கும் தள்ளிப் போடு என்பது சரியா?
“பேய்க் கதை கதையாதை....“
“..எங்கடை கலை, கலாசாரம் எல்லாவற்றையும் சீரழிச்சுப் போட்டுத்தான் வேறை வேலை பாப்பியள் போலகிடக்கு. இதோடை எப்படி மங்கள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது?“ என்பார் தாத்தா.
சரியான நியாயம் போலத் தோன்றுகிறதா? அப்படியானால் நீங்களும் அவரது சாடிக்கு மூடிதான்.
வேட்டி உடுத்து குடுமியும் வைத்திருந்த தாத்தா இன்று டவுஸர் போட்டு பெல்ட்டும் கட்டியது மட்டுமல்ல, தலைமுடிக்கு டை அடித்து இளவட்டம் போலத் திரிகிறாரே, அதற்கென்ன பெயர். இதுவும் கலாசார சீர்கேடா?
இரண்டுமே காலாசார சீர்கேடல்ல.

தொடர்ச்சி 10ம் பக்கம்

CENTURY Travels GmbH

Rheinische Strasse 29
44137 Dortmund

Steeler Strasse 150
45139 Essen

Emirates

Colombo
ab 699 €-799 €

Sommer Special JULI/ AUGUST


Fon: 0231 557 4319 / 0231 5896 557
Mob: 017621682149 Nishanthan

Emirates

Unsere Services
Mietwagen/ Versicherung/Pauschalreisen/Hotels/ Visum Service/Flughafen Abholung
Email: info@centurytravels.de

09 பக்கத் தொடர்ச்சி

# வெளியிலை" என்று .....



காலம் மாறும்போது எமது பழக்கவழக்கங்கள் மாறுகின்றன. கருத்துக்கள் மாறுகின்றன. கொள்கைகள் மாறுகின்றன. நம்பிக்கைகள் சீர் குலைகின்றன.

அது நியதி. காலையில் பழங்கஞ்சி குடித்த எமது சமுதாயத்திற்கு இன்று காப்பி, தேநீர் இல்லையென்றால் "விடிய மாட்டேன்" என்கிறதே அதுபோலத்தான். "கலாசார சீர்கேடு விஷயத்தை விடு.

"இது சுகாதாரம் சம்பந்தப்பட்டது. இதோடை எப்படி கண்ட இடமும் திரியிறது" என்பார் மற்றொருவர்.
இரத்தமும் சீழும் வடியிற அழுக்குப் புண்ணுக்கு மருந்து கட்டிக்கொண்டு கோயில் குளம், சாமியறை, சமையலறை எல்லாம் கூச்சமின்றித் திரிவார்கள்.
அதில் சுகாதாரக் கேடு இல்லையென்றால், பெண்களின் இந்த இரத்தத்தில் மட்டும் என்ன சுகாதாரக் கேடு இருக்கப் போகிறது.
அழுக்குப் புண்ணில் கிருமி தொற்றியிருக்கிறது அது சுகாதாரக் கேடு.ஆனால் பெண்களில் கசிவது புது இரத்தம். கிருமித் தொற்று எதுவும் கிடையாது.
வாயால் எச்சில் வழிகிறது, மூக்கால் சளி ஒழுகுகிறது. அதைத் துடைத்து விட்டு சகல வேலைகளையும் செய்கிறோம்தானே.
அதை விட மேலானது பெண்களின் இந்த மாதாந்த இரத்தப் போக்கும். அதோடை திரிவதும், அதைத் தள்ளிப் போடுவதும் அவர்களது இஷ்டம்.
ஆணாதிக்க நிலைப்பாடுதான் பெண்களை துடக்கென்றும், விலக்கென்றும் அந் நாட்களில் விலக்கி வைப்பதும், விலகியிருக்க நிர்ப்பந்திப்பதுமாகும்.
அதற்கு பெண்கள் தாங்களாகவே அடிபணிவதா?

ஏற்கனவே சொன்னது போல மாதப்போக்கு என்பது ஒரு சாதாரண நிகழ்வு.சுவாசப்பையானது காற்றை உள்ளும் வெளியும் சுவாசிப்பது போல, ஆண்களுக்கு விந்து உற்பத்தியாகி வெளியேறுவது போல,கண்ணீர் சிந்துவது போல இதுவும் ஒரு சாதாரண உடலியல் செயற்பாடு.இதில் வெட்கப்படுவதற்கோ, அசிங்கப்படுவதற்கோ எதுவும் இல்லை.
ஆண்டாளும், உமாதேவியும், கன்னி மேரியும் கூட இதற்கு விதிவிலக் கானவர்கள் அல்ல.
அவர்களுக்கு வந்ததுதான் இன்றைய பெண்களுக்கும் வருகிறது.
"அவர்கள் புனிதமானவர்கள், தெய்வீகப் பிறவிகள். அவர்கள் இவற்றிற்கு அப்பாற்பட்டவர்கள்" என்று யாராவது சொன்னால், அவர்களைப் பெண்கள் என்றே சொல்லமுடியாது என்பேன்.
எனவே மாதவிலக்கு நாட்களிலும் ஏனைய நாட்களில் உண்பதுபோல, உடுப்பதுபோல, தொழில் புரிவதுபோல செயற்படலாம். கோயிலுக்கும் போகலாம். திருமணத்திற்கும் போகலாம். விரதமும் பிடிக்கலாம்.

ஆசார பூச்சாண்டிகள் காட்டி பெண்களைப் பயமுறுத்தாதீர்கள்.
சுகாதார விதிகளைக் கூறித் தனிமைப்படுத்தாதீர்கள், பண்பாட்டுப் பெருமைகளைக் கூறி அவர்களை முடக்கி வைக்க முயலாதீர்கள்.
தள்ளிப் போடுவதிலும் தவறெதுவும் இல்லை.

அதிலும் முக்கியமாக கடுமையான வலி, உதிரப் பெருக்கு அல்லது அவளது வேலைக்கு இடைஞ்சலாக இருந்தால் மட்டும்.

மருத்துவ ரீதியாகப் பார்த்தால் மிக அவசிய தேவைக்காக ஒரு சில நாட்கள் தள்ளிப் போடுவதில் பாதிப்பில்லை என்றே சொல்கிறார்கள்.


மாறாக, கோயில், விரதம், நல்லநாள்,
ஆசாரம், சுகாதாரம்
போன்றவற்றிற்கெல்லாம் தள்ளிப்போடுவது
பெண்கள் தங்களைத் தாமே,
தமது பெண்மையை,
தமது மாண்பை
இழிவு படுத்தும் செயல் என்றே நான் சொல்வேன்.

"சரி, நீ தள்ளிப் போடாவிட்டால் கிட. நாங்கள் நிகழ்ச்சிக்கான திகதியைத் தள்ளிப் போடுறம" என்றால் ஏற்றுக் கொள்ளலாமா?

உங்களுக்காக விட்டுக் கொடுப்பதுபோலக் காட்டிக் கொண்டே உங்கள் பெண்மையை அவமதிக்கும் கபட நாடகம் இது.
மசிந்து கொடுக்காதீர்கள்.

ஆனால், தள்ளிப் போடுதல் தவறில்லை.

அது உங்களுக்காக மட்டுமே,
அதுவும் உங்கள் உடற் தேவைகளுக்காக
மட்டுமே இருந்தால்!

விநாயகா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமேரிக்கா
போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும்
பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த

பண்டித் துர்க்கா பிரசாத்

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம்,
பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம்
வாகனம், விசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ
முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள்,
கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
பேசும் மொழி - ஆங்கிலம். ஹிந்தி. ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை


Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655

PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

Adava Brida
1 Etage Brück str 20-26
44135 Dortmund
02343258759 / 015204124756 / 017672787821

*Bridal Make-up
*Hochzeit make-up
*Puberty make-up
*Christian make-up
*Facial
*Wimpernverlängerung
*Waxing
*Blumenkette

NANTHA FOTO



TTS ASIEN SUPERMARKT
TTS Brothers GmbH & Co.KG
★ Lebensmittel ★ Seafood ★ Textilien ★ Schmuck
Germany நாட்டில் 25 ஆண்டுகளைக் கடந்த ஒரே நிறுவனம்



உங்கள் வீட்டுத் தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்
மற்றும் ஆடை அணிகலன்களுக்கும் நாடவேண்டிய ஒரே
ஸ்தாபனம்.
நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!



RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Helmholtz Str 11 | 46045 | Oberhausen
Telefon : 0208 20 28 29

Johannes Str 35 | 53225 | Bonn Beuel
Telefon : 0228 4037 7846
Fr. und Sa. 11.00 bis 19.00 Uhr



# பெண்களின் பிரதிநிதித்துவம் தேர்தல் ஏற்படுத்திய சவால்

யாழில் இருந்து அருண்மொழி




பெண்களின் சமஉரிமையை வலியுறுத்தும் சர்வதேச பெண்கள் தினம் அனுஷ்டிக்கப்படும் இந்த வேளையில், புதிய சர்ச்சை ஒன்றுக்குள் இலங்கை சிக்கிக்கொண்டிருக்கின்றது. சட்டத்தின் மூலமாக பெண்களுக்கு 25 வீத ஒதுக்கீட்டைக்கொடுக்க வேண்டும் என்பதைக் கூட செய்ய முடியாத நிலை உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போது ஏற்பட்டிருக்கின்றது.

இந்தக்கணக்கில் பெண்களுக்கு சமஉரிமை என்பது இலங்கையைப் பொறுத்த வரையில் நீண்ட தொலைவில் இருப்பதாகவே தெரிகின்றது. இலங்கைத் தமிழர்களின் நிலையும் இதனைவிட மோசமாகத்தான் உள்ளது.

இலங்கையில் கடந்த பெப்ரவரியில் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சர்வதேச அளவில் கவனத்தைப் பெற்றிருந்தது. தேர்தல் முடிவுகள் அரசியலில் புதிய சர்ச்சைகளை ஏற்படுத்தியிருப்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அந்த அரசியல் விவகாரங்களுக்கு அப்பால் பெண் களுக்கான ஒதுக்கீட்டிலும் சிக்கல் ஒன்று உருவாகியிருக்கின்றது. இதனை தேர்தல் ஆணைக் குழு எவ்வாறு தீர்க்கப்போகின்றது என்பதைத்தான் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றங்கள் சமூகத்தின் கீழ் மட்டத்திலிருந்து நிர்வாகிகளை, தலைமைகளை உருவாக்கும் ஒரு பொறிமுறை. இந்தப் பொறிமுறையின் மூலமாக அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை இலக்காகக்கொண்டு சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் முதன்மையானதுதான் பெண்களுக்கு 25 வீத பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பது. இப்போது , சிக்கலுக்குள்ளாகியிருப்பதும் இந்த அம்சம்தான்.

இதன்படி தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்யும்போது 25 வீதம் பெண்களுடைய பெயர்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அனைத்துக் கட்சிகளுக்கும் நெருக்கடியைக் கொடுத்த விடயம் இது. பெண்கள் சுமார் 10 வீதமே அரசியலில் ஈடுபடும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் இது சிக்கலானதுதான். ஒருவாறு உறவினர்கள், தெரிந்தவர்கள் தேடிப்பிடித்து வேட்பாளர் நியமனப்பத்திரங்களைக் கொடுத்தாயிற்று.

இரண்டாவது சவால் இப்போது உருவாகியுள்ளது. கட்சிகள் வெற்றிபெற்ற ஆசனங்களுக்கு பிரதிநிதிகளை நியமிக்கும்போதும் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதம் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இம்முறை ஒரு கலப்பு முறையில் இடம்பெற்றது. 60 வீதம் வட்டார முறையில் நேரடியாகவும். 40 வீதம் விகிதாசார முறைப்படியும் தெரிவு இடம்பெற்றது. விகிதாசார முறைப்படி

கிடைக்கும் உறுப்பினர்களை நியமிக்கும்போது பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், வடக்கு, கிழக்கில் உள்ள குறைந்தது 10 உள்ளூராட்சி சபைகளில், பெண்களுக்கான 25 வீத பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவிக்கிறார். உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் உள்ள குறைபாடுகளினால், குறைந்தது 10 உள்ளூராட்சி சபைகளில், பெண்களுக்கான 25 வீத இடங்களை ஒதுக்கீடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வட்டார முறையில் ஒரு அரசியல் கட்சியின் சார்பில் ஆண் வேட்பாளர்கள் மாத்திரம் வெற்றி பெற்றிருந்தால், அந்தக் கட்சிக்குக் கிடைத்த விகிதாசார அடிப்படையிலான ஆசனங்களை பெண்களுக்கு ஒதுக்க வேண்டும். எனினும், 3 ஆசனங்களுக்குக் குறைவான ஆசனங்களைப் பெற்ற கட்சிகள், பெண்களை விகிதாசார முறையில் நியமிக்க வேண்டியதில்லை. பெண்களுக்கு 25 வீத இடங்களை ஒதுக்க முடியாத நிலையில் உள்ள 10 உள்ளூராட்சி சபைகளுமே, வடக்கு கிழக்கில் தான் உள்ளன.

இலங்கை அரசியலில் என்றும் சந்தித்திருக்காத ஒரு சர்ச்சை - சிக்கல் இதன்மூலமாக இப்போது உருவாகியிருக்கின்றது. சட்டத்தில் கொடுத்தும் நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றாகத்தான் இந்த பெண்களின் பிரதிநிதித்துவ விவகாரம் உள்ளது. இந்த நிலையில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் என்ன செய்யப்போகின்றார் என்பதுதான் அனைவரிடமும் எழும் கேள்வி!

"சாத்தியமானளவுக்கு பெண்களுக்கான 25 வீத ஒதுக்கீட்டை உறுதிப்படுத்த முயற்சிப்போம். இல்லா விட்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது" என்று மகிந்த தேசப்பிரிய கையை விரிக்கின்றார். உண்மைதான். அவரால் ஒன்றும் செய்ய முடியாது. பெண்களின் சமத்துவத்துக்காக குரல் கொடுக்கும் அமைப்புக்கள்தான் இன்னொரு முறை இவ்வாறான நிலை ஏற்படாமலிருக்க பெண்களை மேலும் வலுவூட்டி அரசியல் நீரோட்டத்துக்குக் கொண்டுவருவதற்கான செயற்பாடுகளை இப்போதே ஆரம்பிக்க வேண்டும்.!



# இவங்களாரடா எங்கடை வீட்டு கரியை எடுத்து காசாக்குறது?

## ஆலையில்லா ஊரினிலே...



கனகசபேசன் அகிலன்

அடி, உதை, கொஞ்சம் நகைச்சுவை, இவைதான் யாழ் இந்துக் கல்லூரியில் ஆரம்ப காலத்தில் எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஆசானை நினைவுபடுத்தும். அவர் கற்பித்த ஆங்கிலம் ஏனோ என் மண்டையில் ஏறவில்லை, எப்போது எவனுக்கு அடிப்பாரோ அல்லது கிண்டலடிப்பாரோ என்ற ஏக்கமே முழு நோக்கமாக இருக்கும் போது ஆங்கிலமெங்கே ஏறப்போகின்றது? இப்படியே ஏக்கத்தில் நாட்கள் நகர்ந்தபோது, ஒரு நாள் அவர் பார்வை அரியாலையில் இருந்து வந்த ஒரு மாணவன் மீது திரும்பியது, அவன் அன்று என்ன பிழை செய்தான் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, அதற்கு அவர் அவனைப் பார்த்து "அரியாலை சுப்பா நீ கரியாலை தீட்டு" என்று கூறியது இன்னும் என் மனதில். அன்று அவர் அப்படி கூறியபோது எனக்குச் சிறு சந்தேகம், "ஆரடா கரியாலை பல்லுத்தீட்டப் போறான், இந்தாளுக்கு எதோ மண்டையில தட்டிப் போட்டுது போலை", இல்லாட்டி "அரியாலை கரியாலை" என்று சொல்ல இதமாக இருப்பதால் சொல்லியிருப்பாரோ? என்று அந்தநேரம் எண்ணிக்கொண்டேன்.

ஆனாலும் அவர் சொன்ன வரிகள் என் நினைவில் இருந்து அகலவில்லை. நான் ஒரு கிராமத்தான், நகரங்களில் நடைமுறையில் இல்லாத பல பழைய சம்பிரதாயங்கள் எனது கிராமத்தில் அப்போதும் பழக்கத்தில் இருந்தது, எனவே என் கிராமத்தில் யாராவது கரியால் பல் தீட்டுகிறார்களா என்று எப்போதும் அவதானிப்பேன், ஒருசிலர் "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி" என்று வேப்பங்குச்சியால் பல் தீட்டுவார்கள், ஆனால் அநேகமானவர்கள் கோபால் பற்பொடி, SR SIGNAL போன்ற பற்பசைகளை தான் உபயோகித்தார்கள். நாளடைவில் பற்பொடியும் உபயோகத்திலிருந்து மறைந்து விட்டது, பசை நிரந்தரமாக எம்முடன் ஒட்டிக்கொண்டது. சமையல் பாத்திரம் கழுவுபவர்கள் மாத்திரம் சாம்பலை உபயோகித்து தென்னம் தும்பால் உரஞ்சிக் கழுவுவார்கள், அதுவும் காஸ் (Gas) அடுப்புகள் வந்தபின் மருகி விட்டது, இனி சாம்பலுக்கும் கரிக்கும் எங்கே போவது?

சில மாதங்களுக்கு முன் கரியால் செய்த பற்பசைகள் அழகான கொள்கலன்களில் அடைக்கப்பட்டு பல மேற்கத்தைய நாடுகளில் விற்பனையாவதை, நான் மட்டுமல்ல, பலரும் அவதானித்திருக்கிறார்கள், அதில் சில தமிழ் அன்பர்கள் "இதைப் பாரடா, எங்கட மூதாதையர் எப்பவோ செய்ததை இவங்கள் இப்ப செயப்பார்க்கிறாங்கள், இவங்களாரடா எங்கடை வீட்டு கரியை எடுத்து காசாக்குறது?" என்று ஆதங்கப்பட்டு முகநூல் பக்கங்களில் பல பதிவுகளை பதிவேற்றியிருந்தார்கள். இப்படியான பதிவுகள் தான் இதைப்பற்றி என்னை எழுதத் தூண்டின.




தமிழனின் கண்டுபிடிப்புகள் பல, போர்க்காலங்களில் விளக்கெண்ணை அருகியிருந்த நேரத்தில், மெழுகுதிரியையும் தண்ணியையும் உபயோகித்து ஜாம் போத்தல்களில் நீண்டநேரம் விளக்கெரித்தது, மண்ணெண்ணையை உபயோகித்து உழவு இயந்திரங்களை ஓட்டி விவசாயம் செய்தது, சைக்கிள் டைனமோவிலிருந்து (ஒருவனை வியர்க்க வியர்க்க சைக்கிள் ஓடவைத்து) மின்சாரம் பெற்று பலரும் வானொலிகளில் முக்கிய செய்திகளை கேட்டது என்று தமிழனின் கண்டுபிடிப்பு பட்டியலில் இவை ஒரு சில மாத்திரமே. அண்மையில் கூட ஒரு அன்பர் கடலில் ஓடும் துவிச்சக்கர வண்டியை கண்டுபிடித்திருந்தார், நடுக்கடலிலை சைக்கிளை இறங்கித் தள்ளமுடியுமா? இதற்கு கப்பலே மேல்! இப்படியான கண்டுபிடிப்புகளில் எத்தனை இன்னமும் நிலைத்திருக்கின்றன? பற்பசை வந்தவுடன் கரி கயிலாயம் போனது போல், மேற்கத்தைய பொருட்கள் பாவனையில் வந்தவுடன், பலவும் பஞ்சத்துக்கு சுட்ட பலகாரங்கள் போல் மலையேறி விட்டன.

தொடர்ச்சி 24ம் பக்கம்



# நாம் நாமாகவே எழுவோம்!






ரஜினா தருமராஜா

பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்துகிறார்கள் என்று இன்னும் சொல்லிக் கொண்டு இருக்காமல் பெண்கள் தங்களை தாங்கள் முதல் சரிசெய்து கொள்ளவேண்டும்.

பெண்கள் என்றாலே வலிமை குறைந்தவர்கள் பயந்தவர்கள் என்று கூறினார்கள் இன்றும் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி கூறியே பெண்களை அடிமைப்படுத்தி விட்டார்கள். சில விடயங்கள் அக்காலந்தொட்டு இக்காலம் வரை அப்படியே பின் தொடர்ந்து வருகின்றன. மாற்றங்கள் கொண்டு வருவது இலகுவான விடயம் அல்ல. காலங்கள் மாறிவரும் பொழுது இவையெல்லாம் மாற்றம் பெறவேண்டும். ஆண்களும் பெண்களும் மாறவேண்டும். ஆண்கள் பெண்களையோ பெண்கள் ஆண்களையோ அடிமைப்படுத்தக்கூடாது. இருவருமே சரிசமமானவர்கள்.

பெண் என்றால் சமையல் அறையில் சமைப்பவர்கள் தான். வேறு வேலைகளுக்குச் செல்பவர்கள் இல்லை என்னும் கூற்றை மாற்றவேண்டும்.

பெண்களை முடக்கி வைத்தது அந்தக்காலம். தயவுசெய்து இக்காலகட்டத்திலும் தொடரவேண்டாம்.

பெண் என்பவள் கல்வியை நிறுத்தி விடக் கூடாது. கல்வி கற்று வேலைகளுக்குச் சென்று உங்கள் சொந்தக் கால்களில் நிற்கவேண்டும்.

தாய்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி பெண்கள் சுதந்திரமாகத் தான் வாழ்ந்து வருகின்றனர். சிலர் மட்டுமே பயத்தினால் பெண்களை முடக்கி வைக்கிறார்கள். தந்தை அல்லது கணவனாக இருந்தாலும் பெண்களை முடக்கி வைக்காதீர்கள். பெண் என்பவள் ஒரு தாயாக, மனைவியாக, சகோதரியாக, அண்ணியாக, நண்பியாக இருந்து உதவி செய்பவள். ஓர் ஆணின் வெற்றிக்குக் கரணியமாக இருப்பவள் பெண் தானே! சரியாக வழிநடத்துபவளும பெண்ணல்லவா! அனைத்து வேலைகளையும் செய்யும் சக்தி உடையவள் பெண்!

ஓர் உயிரினை உயிர் கொடுத்து இவ்வுலகிற்குக் கொண்டு வருபவள் பெண். வலிமையுடையவள் பெண். இவளை முடக்கி வைக்க முடியுமா?

பெண்களை குறைவாக நினைக்கும் காலத்தைவிட்டு பெண்களை மதிக்கும் காலம் வந்துவிட்டது.

ஆண்கள் செய்யும் தொழிலை அவர்களும் செய்து வருகிறார்கள். துணிவும் திறமையும் உள்ளவர்களாக மாறிவருகிறார்கள். பெண்கள் நாங்கள் துணிவுடன் இவ்வுலகில் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

திருமணத்திற்குப் பின் சில ஆண்கள் அவர்களின் மனைவியின் திறமையினை வெளிக்கொண்டு வர விடுவதில்லை. அவர்கள் அடிமைப் படுத்தி அத்திறமைகளை முடக்கி வைக்கிறார்கள். அதே நேரம் அவர்கள் செய்யும் வேலைகளில் பிழை கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். பாராட்டுவதுமில்லை. கணவன் திட்டினாலும், அடித்தாலும் அவையெல்லாம் மறந்துவிட்டு, தங்களுடைய கடமைகளை சரியாக செய்து வருகிறவள் பெண். இச் சுமைகளைத் தாங்கி வரும் பெண்கள் வலிமையுள்ளவர்கள். பலவீனமானவர்கள் அல்ல. அன்பினாலும் வலிமையுடையவள்.

எந்த வேலையென்றாலும் மிகவும்கவனமாகவும் ஒழுங்காகவும் முழுமையாகவும் செய்து முடிப்பவர்கள். எங்கள் உணர்வுகளை அடக்கிவைக்கமுடியுமா? எதிரிகளோடு போர் புரிபவர் பெண்களும் அல்லவா! நாம் நாமாகவே எழுவோம்!

## செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் தான் போதிக்கிறான்

ஓர் தலைவனுக்கான முழுத் தகுதியும் உடையவர் நம்மவர் கமல் என்று இயக்குனர் பாரதிராஜா வாழ்த்து தெரிவித்துள்ளார். கமலின் அரசியல் பயணம் வெற்றி பெறவும் பாரதிராஜா கூறியுள்ளார். இயக்குனர் பாரதிராஜா நடிகர் கமல்ஹாசனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது : என் இனிய நண்பர் கமல்ஹாசனுக்க பாரதிராஜா எழுதுகிறேன், "அறிவாளியாய் இருப்பதைவிட புத்திசாலியாக இருக்கிறவன் தான் ஜெயிக்கிறான்" என்ற தத்துவம் வாழ்க்கைக்கு மட்டுமல்ல, அரசியலுக்கும் அப்படியே பொருந்தும். தமிழ்நாடு இன்று சாதி, மதம், இனம் வேற்றுமைகளால் உடைக்கப்பட்டுக் கிடக்கிறது. இது அத்தனையும் ஒரே அணியில் கூட்டிச் சேர்ப்பது பெரும்பாடு.

கரைவேட்டிக்ட்டி கட்சிக் கொடி பிடித்து, மேடை போட்டு, மைக் பிடித்து பேசுவது மட்டும் தான் மக்களுக்கான அரசியல் பிரச்சாரம் அல்ல! திரைப்படத்தின் மூலமும் சமூக அரசியல் பிரச்சாரம் அல்ல!திரைப்படத்தின் மூலமும் சமூக அரசியல் கருத்துகளைச் சொல்லலாம்.

மக்கள் பணியாற்றியவர் என் திரைப்படங்கள சென்சார் செய்யாமல் திரையிட அனுமதிக்காததால் ஒரே ஆண்டில் தமிழகத்தில் ஆட்சியமைக்கிறேன் என்றாராம் அறிஞர் அண்ணா. கமல்ஹாசனும் தன் திரைப்படங்களின் மூலம் சமூகக் கருத்துகளை மக்களிடம் விதைத்தவர்தான். தன் நற்பணி மன்றத்தின் மூலம் மக்கள் பணியாற்றியவர் தான். இந்த தானத்தில் இருந்து தன் உடலையே தானம் செய்தவர் கமல்.

தலைவனுக்கான தகுதியுடையவர் அவர் அரசியலுக்கு வரவேண்டுமென்ற உள்நோக்கத்தோடு இது போன்ற நற்பணிகளை செய்தவரல்ல. உண்மையான தொண்டுள்ளம் கொண்ட காரணத்தினால் தான் செய்தார் ஓர் தலைவனுக்கான முழுத் தகுதியும் உடையவர் நம்மவர் கமல்.



மக்கள் நீதி மய்யத்தின் பயணம் வெற்றியடைய வாழ்த்துகிறேன். செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் தான் போதிக்கிறான் என்று சொல்வார் பெர்னாட்ஷா. கமல்! நீங்கள் செய்ய முடிந்தவர். நடிகர் ரஜினி அரசியலுக்கு வருவதை கடுமையாக விமர்சித்த பாரதிராஜா கமல்ஹாசனுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மாற்றத்தை விரும்பிய இலங்கை மக்கள்

- யாழில் இருந்து
- ராஜா மகன்



இலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலின் முடிவுகள் அரசியல் கள நிலவரத்தில் உருவாகிவரும் மாற்றங்களைத் தெளிவாகக் காட்டியிருக்கின்றது. தென்னிலங்கையில் சிங்கள மக்கள் தற்போதைய மைத்திரி - ரணில் கூட்டாட்சி மீது தமது அதிருப்தியை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இது உள்ளூராட்சி மன்றத் தேர்தலாக இருந்தாலும், தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள அரசியலில் தவிர்க்க முடியாத ஒருவர் என்பதை இத்தேர்தல் முடிவுகள் உணர்த்தியுள்ளன. கடந்த சில வாரங்களாக இலங்கை அரசியல் சூடாக இருந்தமைக்கு இதுதான் காரணம்.

தமிழ் மக்களும் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமீது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளால் த.தே.கூ உருவாக்கப்பட்ட காலம் முதல், தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதுவே அதிக இடங்களில் வெற்றி பெற்று வந்துள்ளது. இந்த முறை அதிகமாக இடங்களைப் பிடித்தாலும், கூட்டணி அமைத்தால் மட்டுமே உள்ளாட்சி சபைகளைக் கைப்பற்றமுடியும் எனும் நிலை உருவாகியுள்ளது. இதனால், வடக்கில் பெரும்பாலான சபைகளில் ஆட்சி அமைப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் த.தே..கூட்டமைப்புக்கு சவால்விடும் வகையில் கஜேந்திர குமார் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் வளர்ந்ததுள்ளது. இவர்கள் இரு சபைகளைக் கைப்பற்றியுள்ளனர். மேலும் மூன்று சபைகளில்

ஆட்சியை நிர்ணயிக்கும் வல்லமையைப் பெற்றுள்ளார்கள். ஈ.பி.டி.பி. இரண்டு சபைகளைக் கைப்பற்றியிருக்கின்றது. கூட்டமைப்பின் தனி ஆதிக்கம் இதன்மூலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலாக மைத்திரி - ரணில் தலைமையிலான அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகவும் இதனைக் கருதலாம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு அரசியலமைப்பு இடம்கொடுக்காது என்றாலும்கூட, அவரால் நிறுத்தப்படும் ஒருவர் ஜனாதிபதியாக ஆகக்கூடும் என்பது தெளிவாகிறது. மீண்டும் ஜனாதிபதியாக வரலாம் என்ற மைத்திரிபால சிறிசேனாவின் கனவும், ரணிலின் ஜனாதிபதி கனவும் இந்த முடிவுகளால் கலைகின்றன. அவை தகர்க்கப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவின் இந்த வளர்ச்சியும், அரசியலின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடியவராக அவர் இருப்பதும், இனப்பிரச்னைக்கான தீர்வை உள்ளடக்கிய அரசியலமைப்பு மாற்றம் சாத்தியமாகப் போவதில்லை என்ற அபாய எச்சரிக்கையையும் விடுத்திருக்கின்றது.


திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி

M point Supermarkt

e.mail: mpointsupermarkt@yahoo.de




துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS MONEY TRANSFER
Email : shansure7480@yahoo.de

உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள், மற்றும் மளிகைப் பொருட்களுக்கும் எம்மை நாடுங்கள்










M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )

Tel: 02583 30 30 300 0179 48 555 54





# பெண்பிள்ளைகளின் பாதுகாப்பு

அனித்தா பூஷன்

வளர்ந்துவரும் உலகில் அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்கும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஆயினும் குழந்தை முதல் மூதாட்டி வரை உலகின் பல்வேறு நாடுகளில் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் தினமும் பெண்கள் வன்முறைக்கு உள்ளாவதை செய்திகளில் கண்டுகொண்டே இருக்கிறோம். இதிலும் ஆசிய நாடுகளில் பெண்பிள்ளைகளுக்கான பாதுகாப்பு என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. ஒக்டோபர் மாதம் 1ம் திகதி சர்வதேச சிறுவர்தினம் கொண்டாடப்படுகின்றது. இது 18 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இரு பாலாரையும் உள்ளடக்கி, இச்சிறுவர்களுக்கான அனைத்து நலன்களும் பேணப்பட வேண்டும் என கருத்திற் கொண்டே ஐக்கியநாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கப்பாலும் பெண்பிள்ளைகளுக்கு மேலதிக பாதுகாப்பு அவசியம் எனபதை உணர்ந்தே, பெண்பிள்ளைகளுகான உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கப்படவேண்டிய அவசியத்தை உணர்த்த ஐக்கியநாடுகள் சபையினால் 2011ம் ஆண்டு ஒக்டோபர் மாதம்11ம் திகதி சர்வதேச பெண்பிள்ளைகள் தினம் (International Girl child day) என பிரகடனப்படுத்தப்பட்டு, 2012ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதன் மூலம் சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து, பெண்பிள்ளைகளுக்கான பாதுகாப்பு என்பதை அனைவரும் உணரவேண்டும் என்ற ரீதியில் பல செயற்திட்டங்கள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பெண்பிள்ளைகளுக்கான பாதுகாப்பு என்பது குடும்பத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு பெண்பிள்ளையும் தன் தாயையே முன்னுதாரணமாகக் (சுழடந அழனநட) கொண்டு அனைத்தையும் செய்ய முற்படுவர். அவர்களின் முதல் தோழியும் தாயே. பூப்பெய்தும் பருவமானது பெண்பிள்ளைகளின் வாழ்வின் மிக முக்கியமான பருவமாகும். இதன்போது பிள்ளைகள் உடலியல் ரீதியான பல மாற்றங்களை பெறுவது மட்டுமல்லாமல், உளவியல் ரீதியாகவும் பல்வித மனச்சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் தாயின்

அரவணைப்பு என்பது மிக முக்கியமாகும். இப்பருவத்திலேயே பிள்ளைகளுக்கு பல்வேறு விதமான மனக்குழப்பங்கள் ஏற்படும். இவை சரியான விதத்தில் தீர்க்கப்பட வேண்டும். எம் தமிழ் சமூகத்தைப் பொறுத்தரையில் பிள்ளைகளுடன் பாலியல் ரீதியான விடயங்களை கதைப்பதற்கு பெற்றோர் இன்னமும் தயக்கம் காட்டுபவராகவே உள்ளனர். இவ்விடயங்கள் பிள்ளைகளுக்கு இளம்பராயத்தில் தேவையற்றது என எண்ணுகின்றனர். இதனாலேயே சமூகத்தில் பல தவறுகள் ஏற்படுகின்றது. ஏனெனில் தெரிந்து செய்யும் தவறை விட பிள்ளைகள் அறியாமையால் செய்யும் தவறே பல பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு காரணமாகும். இன்றைய நிலையில் தாய்மார்களும் முழுநேர வேலைக்கு செல்வதால் பிள்ளைகளுடன் செலவழிக்கும் நேரம் மிகக்குறைவே. கிடைக்கும் நேரத்திலும் வீட்டுவேலை மற்றம் இதரவேலைகளில் ஈடுபடுவர். பிள்ளைகளுடன் மனம்விட்டு பேசும்வாய்ப்பை அதிகரிக்க வேண்டும். முக்கியமாக அன்றாட வாழ்வில் வெளியில் பிள்ளைகள் என்ன விடயங்களை மேற்கொண்டார்கள் என்பதை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

தாயகத்தைப் பொறுத்தவரை பெரும்பாலான பாடாலையில் கூட ஆசிரியர்கள் பாலியல் சம்பந்தமான விடயங்களை பிள்ளைகளுடன் கலந்துரையாட தயங்குகின்றனர். எவ்வாறு ஒரு குழந்தை உருவாகின்றது? எவ்வாறு குழந்தை பிறக்கிறது? என்பது சம்பந்தமாக பாடசாலை கல்வித்திட்டத்தில் ஓர் பாடமாக இருக்கின்றது. ஆனால் பல பெண் ஆசிரியர்கள் இதனை கற்பிக்க தயக்கத்தினால் கற்பிக்காது விடுகின்றனர். அதாவது வெளிப்படையாக வாழ்க்கைக்கு தேவையான ஒன்றை கதைப்பதில் உள்ள தயக்கம்தான், பின்விளைவுகள் தெரியாமல் நடைபெறும் பல பிரச்சினைகளுக்கு காரணமாகின்றது.

தாயகத்தில் இன்னமும் பெண்பிள்ளைகள் தனியே பாடசாலைக்கு செல்வதோ அன்றேல் தனியே வீட்டில் இருப்பதோ பாதுகாப்பற்ற ஒன்றாகவே பெரும்பாலான இடங்களில் உள்ளது. இதற்கு அங்குள்ள சமூகசூழலும் ஓர் காரணமாகும். குறிப்பாக தீவகம், வன்னிப்பகுதியில் பாடசாலைகள் பெரும்பாலும் மிகவும் தூரமாகவே இருக்கின்றன. பிள்ளைகள் போகும் வழிகூட பற்றைகள் நிறைந்த, வீடுகளற்ற வெளியாக இருக்கும் அனைவரும் அறிந்த வித்தியாவின் கொலைக்குகூட அந்த சூழலும் ஓர் காரணமாகும். இன்னமும் பெண்பிள்ளைகள் தனியே நடமாட முடியாத சூழல்தான் உள்ளது. இதனைவிட யாழ்ப்பாணத்தில் இன்று சில பெற்றோர்களும் பிள்ளைகளை தூரத்திலுள்ள பாடசாலைகளுக்கு சேர்க்கின்றனர். இதனால் பல பெற்றோர் "பிள்ளை வீட்டுக்கு வந்தாப்பிறகுதான் நெஞ்சுக்குள் தண்ணீர் வந்தது" என்று சொல்லுமளவிற்கு பதட்டத்துடன் தினசரி வாழ்வை கழிக்கின்றனர்.

மாற்றம் என்பது ஒவ்வொருவருக்குள்ளிருந்தும் ஏற்பட வேண்டும். அதுவரை சமூகத்தில் இவ்வாறான பிரச்சினைகள் இருந்துகொண்டேதான் இருக்கும்.

## 17 வது ஆண்டு நினைவுப் பூக்கள்!



பிரிவு:
16.03.2001

மலர்வு:
12.05.1988

அன்பின் திருவுருவே! அருமைக்
கஜனியம்மா!
சொல்லாமல் நீ பிரிந்த துயஉ இன்னும்
நீங்கவில்லை.
ஆண்டுகள் பதினேழு ஆனதம்மா
இப்போது!
அருமைக் கஜனி! உந்தன் அன்புமுகம்
எங்களுக்குள்
நிலையாகி உந்தன் நினைவுகளை
வளஉக்கிறது!
காலங்கள் கரைந்தாலும் கலையாத
உறவாக
வாழ்ந்திருப்பாய் எங்களுடன்!
அன்பே நீ அமைதி பெறு ஆதிசக்தி
நிழலினிலே!
என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா அப்பா அக்கா அத்தான்

**செல்வி கஜனி தேவராஜா**
(பிரேமன், ஜெர்மனி)

S.Thevarajah (U.K.)



# பெண்ணின் மூன்று முகங்கள்



சேவியர்

## உயிர் தந்தவள்-உடன் பிறந்தவள் துணை வந்தவள்

பெண்ணின்றி அமையாது உலகு !
பெண்ணில்லாத உலகத்தைக் கற்பனை செய்து பார்ப்பதே கடினமான ஒன்று ! அது ஒரு வறண்ட பாலையைப் போலவோ, நிழலில்லாத வெயில் சாலையைப் போலவோ மனதுக்குள் அனலாய் படரும்.

பெண்களின் உலகம் அழகானது ! அது உணர்வுகளால் பின்னப்பட்டது. ஆண்களின் உலகம் உழைப்பினாய் ஆனது ! பெண்களின் உலகம் உறவுகளால் ஆனது ! பெண்கள் வசிக்கும் வீடுகள் பூந்தோட்டங்களாகவும், ஆண்கள் மட்டுமே உலவும் வீடுகள் உழவு நிலங்களாகவும் காட்சியளிக்கும்.

எந்த ஒரு ஆணும் முழுமையடைய வேண்டுமெனில் அவன் மூன்று பெண்களின் அரவணைப்பில் வளரவேண்டும். அதில் முதலாவதாக வருபவர் அன்னை ! ஒவ்வோர் மனிதனுக்கும் முதல் காதல் அன்னையோடு தான். கடவுளின் அன்பை, இயற்கையின் அழகை, நேசத்தின் செயலை அவன் அறிமுகம் கொள்வது அன்னையிடம் தான் !

விழியும் விழியும் நேசம் பரிமாறும் அழகை நீங்கள் அன்னை மழலை உறவில் தான் பரவசத்துடன் காண முடியும். புன்னகைக்குள் புதையல் இருப்பதை அந்த அன்னைச் சிரிப்பில் தான் அறிய முடியும். மண்ணை மிதிக்கும் முன் மெல்லிய பாதங்கள் என்னை மிதிக்கட்டும் என கன்னம் நீட்டும் அன்பல்லவா அன்னை !

தொப்புழ் கொடியில் நேசம் ஊற்றி, மழலை வழியில் மடியில் ஏந்தி, சின்ன வயதில் தோளில் தூக்கி, பருவ வயதில் பெருமிதம் சிந்தி, கடைசி வரையில் கண்ணில் சுமப்பவளல்லவா அன்னை !

முதுமையின் முக்கால் படியில் நடக்கும் போதும் அன்னைக்கு பிள்ளை மழலையாய் தான் இருப்பான். அது தான் அன்னை அன்பின் தனித்துவம் ! மறக்க முடியா மகத்துவம்.

அன்னையின் அருகாமையில் இருப்பவன் சொர்க்கத்தின் வாசனையை நுகர்வான். தலை கோதும் அன்னையின் விரல்களில்
இருப்பவன் துயரத்தின் தனிமையைத் தாண்டுவான். புன்னகைக்கும் அன்னையின் நிழலில் வாழ்பவன் முழுமையாய் வாழ்க்கையை நேசிப்பான். அன்னை, ஒரு உயிரை உலகிற்கு அறிமுகம் செய்தவள் மட்டுமல்ல !

ஒரு உயிரை உலகாக அறிமுகம் செய்து வைத்தவள். நம் மழலைப் பாதங்களை மண்ணில் பதிய வைத்தவள் அன்னையெனில், நமது கரங்களுக்கு சிறகுகளை முளைப்பிக்க வைத்தவள் சகோதரி தான். சகோதரிகளின் குடும்பத்தில் வளர்பவன் நீரோடையின் அருகே வளரும் மரம் போன்றவன். செழிப்பு அவனுக்கு குறைவு படாது. பெண்மை யைப் போற்றும் மனிதனாக அவன் வளர்வான்.

தவறு செய்யும் ஆண்களை, "அக்கா தங்கச்சி கூட பொறக்கலையா ?" என்று கேட்பார்கள். காரணம், அக்கா தங்கச்சி கூட பிறந்தவன் ஒழுக்கமானவனாக இருப்பான் எனும் நம்பிக்கை. அக்கா என்பவள் இரண்டாம் அன்னை ! தங்கை என்பவள் மூத்த மகள் ! சகோதரிகளோடு பிறந்தவர்கள் கடவுளின் கருணையை கண்களில் பெற்றவர்கள். பிறரை சகோதரிகளாய் பார்க்கத் தெரிந்தோர் கருணையாம் கடவுளை கண்களில் பெற்றவர்கள்.

வண்ணத்துப் பூச்சியின் அழகிய சிறகாய், பாலை வெளியின் நிழல் கூடாரமாய், தனிமை வெளியின் நம்பிக்கைத் துணையாய் எப்போதும் கூட வருபவர் தான் சகோதரி. பகிர்தலின் புனிதத்தை முதலில் கற்றுத் தருபவள் அவள் தான். விட்டுக் கொடுத்தலின் அழகை புரிய வைப்பவள் அவள் தான். தங்கைக்கு அண்ணனாய் இருப்பது என்பது தேவதைக்கு சிறகாய் இருப்பதைப் போல சுகமானது !

இந்தப் பணத்தில் கடைசியாய் நுழைந்து, கடைசி வரை நடப்பவர் தான் மனைவி ! இறைவன் இணையாய் கொடுக்கும் துணை ! நம் உதிரத்தின் பாகமல்ல, ஆனால் நமக்காய் உதிரம் சிந்த தயாராய் இருப்பவர். தியாகத்தின் முதல் அறிமுகம் ! தன் நிலத்தை விட்டு, தன் தோட்டத்து செடிகளை விட்டு, இடம் பெயர்ந்து போய் இன்னோர் நிலத்தில் வாசம் வீசும் மலர் !

இரண்டறக் கலத்தலின் இல்லற விளக்கம் மனைவி ! பூவாய் வாழ்ந்து இந்த பூமிக்கு புதிய பூக்களைக் கொடுப்பவள் தான் மனைவி. வெளிப்படையான அன்பின் வெளிச்சப் புள்ளி. ஒளிவு மறைவற்ற நேசத்தின் தோழி. உயிருக்குள் உயிரைப் பதியமிடும் உன்னதம் ! உயிரிலிருந்து உயிரை பிரித்தெடுக்கும் பிரமிப்பு. என மனைவியின் அன்பு மகத்தானது !

மனைவியின் மௌனம் யுத்தத்துக்கு சமமான வீரியமானது. மனைவியின் கண்ணீர் பெருங் கடலின் ஆர்ப்பரிப்புக்கு சமமானது. மனைவியின் சிரிப்பு நீள் வானத்தின் பெருமழைக்கு ஒப்பானது. மனைவி என்பவள் மனிதனோடு நடக்கும் இறைவனின் பிம்பம். இமைகளில் இடையிலும் சுமைகளைத் தாங்கும் வலிமை அவளுக்கு உண்டு. ஒரு சின்ன பிரியத்தின் விசாரிப்பில் பிரபஞ்சத்தை பரிசளிக்கும் நேசம் அவளிடம் உண்டு. பெண்மையே ஆண்மையைக் கட்டியெழுப்புகிறது. மென்மையே வலிமையின் அடிப்படை. இந்தப் பெண்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தவர்கள் வாழ்வின் அழகையும், அர்த்தத்தையும் புரிந்து கொள்கின்றனர் !

என் அம்மாவின் முந்தானை பிடித்து நான் வளர்ந்திருக்கிறேன். புரியாமையின் பொழுதுகளில் அவரோடு வழக்காடியிருக்கிறேன். நான் செய்வதே சரி என பிடிவாதம் பிடித்திருக்கிறேன்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்




Chilli Mixx Catering

உங்கள் மங்கலகர வைவங்கள்
சுவைபெற எம்மை அழையுங்கள்!

திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298
+49 176 21303158

தொடர்ச்சி 15 ம் பக்கம்



## பெண்களின் 3 முகங்கள்

சண்டை போட்டிருக்கிறேன். எல்லா சண்டைகளிலும் வெற்றி பெறும் வலிமை இருந்தும், அதை என் உதடுகளில் சூடி புன்னகைக்க வைத்தவர் அம்மா. அப்படித் தான் அம்மாவைப் புரிந்து கொண்டேன்.

எரிச்சலின் பொழுதுகளில், ஏமாற்றங்களின் வீதிகளில், அழுத்தங்களின் அரவணைப்பில் என் ஆயுதங்களையெல்லாம் நிராயுதபாணியான மனைவியை நோக்கி வீசியிருக்கிறேன். புறமுதுகு காட்ட மறுத்த ஈகோவின் சண்டைகளிலும் கலிங்க யுத்தமாய் காயங்களை நிரப்பியிருக்கிறேன். அவை தான் மனைவியை எனக்குப் புரிய வைத்தன.சகோதரியோடு சண்டையிடாத பால்ய தினங்களை எண்ணிவிடலாம். அந்த சிறு வயதுச் சண்டைகள் தான் இன்றைக்கு சண்டையில்லாத பொழுதுகளை உருவாக்கித் தந்திருக்கின்றன.




அத்தகைய சண்டைகளில், விவாதங்களில், முரண்டு பிடித்தல்களில் தான் என் சகோதரிகளை நான் புரிந்து கொண்டேன்.

பெண்களோடு இணைந்து வாழும் வாழ்க்கை நமக்கு புரிதலைக் கற்றுத் தருகிறது. பிரியத்தையும் பெற்றுத் தருகிறது.

அன்னை தெரசாவின் புன்னகை மென்மையானது ! அதுவே வலிமையான அன்பின் ஆயுதம் !பேனா மென்மையானது, வலிமையான சிந்தனைகளால் உலகைப் புரட்டும் வலிமை அதற்கு உண்டு. கண்ணீர் மென்மையானது ! மாபெரும் அரசுகளை நிலைகுலைய வைக்கும் வீரியம் அதற்கு உண்டு. பெண்மை மென்மையானது ! ஆண்மையின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வல்லமை அதற்கு உண்டு.

அன்னையின் மேகத்தில் துளியாய் உருவாகி, சகோதரி எனும் துளிகளோடு இணைந்தே பயணித்து, மனைவி எனும் மண்வெளியில் இரண்டறக் கலந்து அன்பின் நதியாய்க் கடலை அடைவதே இனிமையான வாழ்க்கை !

## அம்மா

கொத்துச் சுகம் தன் பிள்ளை என
பித்துப் பிடித்து வாழ்பவள் அம்மா
வித்தைகள் காட்டிச் சத்துணவு ஊட்டி
பத்திரமாய் பாதுகாக்கும் தெய்வம் அம்மா...

சிற்பிக்குள் முத்து என எடுத்து எனை
சிற்பமாய் செதுக்கி அழகு பாஉத்திடுவாள்
கல்விக் கண் திறக்க வழிகாட்டி
நல்லெண்ணம் வளஉப்பவள் அம்மா...

தலை கோதி விரல்க்ளால் வருடிட
தனை மறந்து மகிழ்ந்திடுவாள் அம்மா
தன் மாஉ மேலும் தோள்மேலும் தாலாட்டி
தாய் மடி வாசம் தந்தவள் அம்மா....

முத்தாக முதல் முதல் முத்தம் தந்து
முதல் நண்பி ஆனவளும் அம்மா
முதல் தெய்வம் முதல் குருவாய் எம்
உயிருக்கும் உடலுக்கும் முதலானவள் அம்மா...

திருமதி இராஜேஸ்வரி சிவராசா

## தூர் வாருகிறேன்

நெடுந்தீவு முகிலன்

மண்ணெண்ணை றம்மில வெட்டின
தகரத்தில் என் வீட்டு கேற்று - நாய்
மட்டும் கீளால பூந்து போறத்துக்கு
இடைவெளியும் விட்டிருக்கு...

கோடிக்கு பின்னால இருக்கிற
கொட்டிலுக்குள் பழைய சைக்கில்
றிம்முகளும் மக்காட்டகளும்
கொழுக்கி கழன்ற மூக்குப் பேனி
கை பிடி அறுந்த லாம்பு
கறள் பிடித்த றங்கு பெட்டி - கறையான்
அரித்த புத்தகங்கள் என இன்னும் எகப்பட்டவை

கழிவறைக்கு வெளியே தேஞ்சு போன
ஒரு சோடி செருப்பு - உள்ளே
தண்ணி கொண்டு போக பெயின்ற் அப்பின
வாழி
எலி தட்டி விட்டு முகம் பாக்கிற கண்ணாடி
எப்பவோ உடஞ்சு போச்சு - உடஞ்சு கிடந்ததில

பெரிய துண்டு திரும்பவும் பாவனைக்கு
உட்ப்படுத்தப்பட்டது.
குசினிக்குள்ள குனிஞ்சு போகாட்டி
கதவின் நிலை உச்சியில் அடிக்கும்
சப்பாணம் கொட்டியிருந்து சாப்பிட்டிட்டு
எழும்பவே ஏவற வந்திடும்.

சாணி மொழுகிய திண்ணை
சாய் ஓலைப் பாய் - தலைக்கு
வைக்க உடுப்பு பொட்டாளி
கதவருகில் கை விளக்கு - நிமிர்ந்து
பார்த்தால் கிடுகு துவாரம் வழியாக நிலா
சரிந்து படுத்தால் முற்றத்தில் மல்லிகை
குப்பற படுத்தால் கனவில் பக்கத்து வீட்டு
செவ்வந்தி
எல்லாத்தையும் விட்டு தூர வந்து விட்டு -
ஓவ்வொருநாளும் நினைவுகளை
தூர் வாருகிறேன்










# வட இலங்கை சர்வோதயத்தின் எதிர்காலமும் அதன் கட்டமைப்பும் தொடர்பான கருத்தரங்கும்







புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் யேர்மனி

புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் யேர்மனியில் 30.09.2017 அன்று நடாத்திய "கிராமிய பூபாளம்" நிகழ்வைத் தெடர்ந்து 01.10.2017 எம் புங்கையூர் கிராமத்தில் இயங்கும் "வட இலங்கை சர்வோதயத்தின் எதிர் காலமும் அதன் கட்டமைப்பும்" என்ற தலைப்பில் "கருத்தரங்கு" ஒன்று சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் தலைவர் திரு. சி. சதானந்தன், ஒன்றிய அமைப்பாளர் திரு. க. மகாலிங்கம், சர்வோதய ஆலோசகர் திரு. கு. வி. பஞ்சலிங்க துரை (பிரித்தானியா) அவர்களின் ஒருங் கிணைப்பில் வட இலங்கை சர்வோ தயத்தின் அறங்காவலரும் இயக்குனருமான செல்வி. பொன். யமுனாதேவி அவர்களின் தலைமையில் விழா மண்டபமான யேர்மனியில் Ennepeta நகரில் காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

இக் கருத்தரங்குக்கு ஐரோப்பிய நாடுகளி லிருந்தும், கனடிய நாட்டிலிருந்தும் சர்வோதயத் தின் நலன் விரும்பிகள் பலர் கலந்து கொண்டனர். அத்துடன் தொண்டர் க. திருநாவுக்கரசு நற்பணி ஒன்றியத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இக் கருத்தரங்கின் முக்கிய நோக்கமே எதிர்காலத்தில் வட இலங்கை சர்வோதயத்தின் உள்கட்டுமானப் பணிகளுக்கு தேவையான நிரந்தர நிதியினை ஏற்படுத்தி கொடுப்பதாகும். இதில் ஒவ்வொரு வரும் தத்தம் கருத்துகளை பரிமாறிக் கொண்டார்கள்.

வங்கியில் நிரந்தர வைப்பாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை வைப்பிலிட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியை உள்கட்டுமானப் பணி களுக்கு பயன்படுத்துதல்.

இப்பணத்திலிருந்து பெறப்படும் வட்டிப் பணத்தை சர்வோதயத்தை தொடர்ந்து இயக்குபவர் யாராக இருந்தாலும், பணிகளுக்கு மட்டும் பயன் படுத்தலாம். வைப்பு நிதிப்பணத்தை சர்வோ தயத்தை இயக்கப்போகும் யாரும் உரிமை கொண்டாடவும், எடுக்கவும் முடியாது. இவ் வைப்பு நிதித்திட்டத்துக்கு ஒவ்வொரு புலம் பெயர் நாடுகளிலிருந்தும் அங்கத்தவர்களை குழுக்களாக அமைத்து செயற்படுதல்.

தற் போதைய நிலையில் மாதம் ஒன்றுக்கு உள்கட்டு மானப் பணிகளுக்கு 2-3 இலட்சம் இலங்கை ரூபா தேவைப்படலாம்.இவ் வைப்பு நிதி திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஒரு குழுஅமைத்து செயற்படுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. இக் குழுவானது வட இலங்கை சர்வோதய செயற்பாடுகளுக்கு எந்த ஒரு சந்தப்பர்த்திலும் கட்டுப்பாடுகளை கொண்டுவர முடியாது என்று ஆணித்தரமாக முடிவெடுக்கப் பட்டது.இக் குழுவில் இணைந்துகொள்ள விரும்புவோர் யாரேனும் இணைந்து செயற்படலாம். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நாடுகளி லிருந்தும் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டனர்:

பிரித்தானியா (UK):
திரு. கு. வி. பஞ்சலிங்கதுரை
திரு. பிரேம் ரஜீந்த் சிவசாமி
திரு. முத்துத்தம்பி சிவபாலன் (சுரேன்)
திரு. நடேசன் உதயராஜ்
திரு. என். செல்வராஜா
திரு. ஏரம்பு வசந்தகுமாரன்

கனடா (Canada):
திரு. கனகசபை ஜெயவீரசிங்கம்
திரு. சோமு சச்சிதானந்தன்
திரு. நாகலிங்கம் சொக்கலிங்கம்
திருமதி. பன்னீர்ச்செல்வம் பூங்கோதை


சுவிஸ் (Swiss):
திருமதி. தர்மராஜா பத்மாதேவி
திரு. சோமசுந்தரம் சதானந்தன்
திருமதி. சந்திரபாலன் இராயேஸ்வரி
திரு. சின்னத்துரை கருணாமூர்த்தி

யேர்மனி (Germany)
திரு. கணேசு மகாலிங்கம்
திரு. சிவஞானம் சதானந்தன்
திரு. சோமசுந்தரம் நடேசன்
திருமதி. தில்லைநாயகி அருளானந்தராஜா
திருமதி. பரிமளா தற்பரானந்தம்
திருமதி. ஜெயராணி செல்வராசா

பிரான்ஸ் (France)
திரு. சுப்பிரமணியம் குகதாசன்
திரு. சுப்பையா சஸ்பாநிதி
திரு. கந்தசாமி லோகேஸ்வரன்
திரு. கனகசபை சோதியழகன்
திரு. இராமசாமி சாந்தகுமார்
திரு. கணபதிபிள்ளை பரமலிங்கம்
திரு. அம்புறோஸ் பீற்றர்
திருமதி. ஜெயராஜ் ஜெயந்தி
திருமதி. கனகசபை மகாலெட்சுமி
திருமதி. சண்முகநாதன் யோகமலர்

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்.யோமன்.பிரஞ்.துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



# கண்ணே கலைமானே.. கன்னிமயில் என கண்டேன் உனை நானே!

## கண்களை ஈரமாக்கும் நினைவுகளுடன் விடைபெறுகிறாள்!




கண்ணே கலைமானே.. கன்னிமயில் என கண்டேன் உனை நானே என்ற தாலாட்டு பாடலைதான் நாம் பாட வேண்டும் என்று ஸ்ரீதேவியின் இறப்புக்கு கமல் இரங்கல் தெரிவித்துள்ளார். துபாயில் ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஸ்ரீதேவி (24.02.2018) மாரடைப்பால் உயிரிழந்தார். திடீரென நடந்துள்ள இந்த செய்தியால் சக நடிகர், நடிகைகள், ரசிகர்கள், அனைவரும் அதிர்ச்சியில் உள்ளனர்.

ஸ்ரீதேவி என்றால் உடன் திரையில் கனியும் இன்னுமொருமுகம் கமல்தான். அவர்கள் படத்தில் காதலித்தார்கள். ஆனால் இரசிகர்கள் அவர்களை நிஜமாக சேரத்துவைக்கத் துடித்தார்கள். அவ்வளவு பொருத்தமான ஜோடியாக கமலுக்கு திரையுலகில் வலம் வந்தவர் ஸ்ரீதேவி.

அவர் மறைவு குறித்து கமல்ஹாசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ஸ்ரீதேவி ஒரு அற்புதமான நடிகை, உச்ச நட்சத்திரம். இவையெல்லாம் விபத்துகள் அல்ல, முயன்று முயன்று படிப்படியாக அந்த குழந்தை நடந்து வந்த பாதை. மூன்றாம் பிறையில் உள்ள பாடல் வரிகளுக்கேற்ப கன்னிமயில் என கண்டேன் என்பதை போல் அவரை 15 அல்லது 16 வயதுகளிலேயே நான் சந்தித்தேன். குழந்தைத்தனம் மாறாத ஒரு பெண்ணாக அவர் இருந்தார். பாலசந்திரனின் அறிவுரைக்கேற்ப ஸ்ரீதேவிக்கு நடனம் கற்றுக் கொடுப்பது, சிறிய சிறிய அசைவுகளை கற்று கொடுப்பது என வகுப்பில் மூத்த மாணவன் போல் அவருடன் பயணித்தேன். அவருடன் 27 படங்களில் நடித்துள்ளேன். அது கிட்டதட்ட சிறிய வாழ்நாள் காலம் ஆகும்.






வாழ்க்கையின் ஒரு பகுதி வரை நான் அவருடன் பயணித்துக் கொண்டே இருந்தேன். பிறகு அவர் இந்திக்கு சென்றுவிட்டபோதும் கூட நானும் சிறிது தூரம் சென்றேன். பிறகு என் பாதை தனி என்று தெரிந்து வந்துவிட்டேன். அவர் பாதை வேறாகிவிட்டது. தனது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசையுள்ள பெண். அந்த குணாதிசயங்கள் எங்கள் இருவருக்கும் பொருந்தும் என்பதால் எங்கள் நட்பு ஒரு வியப்பும் பாசமும் கலந்த நட்பாகவே இருந்தது. மூன்றாம் பிறை படத்தில் கண்ணதாசன் எழுதிய தாலாட்டு பாடல் வரிகளைதான் இப்போது நாம் பாடவேண்டும். நல்ல கலைஞரை இழந்துவிட்டோம்.

## யேர்மனியில் "பிரஞ்சுப் புரட்சி"




யேர்மனியில் க. வாசுதேவனின் "பிரஞ்சுப் புரட்சி" நூல் வெளியீடு! கடந்த 11.02.2018 ஞாயிற்றுக் கிழமை அன்று க.வாசுதேவன் அவர்களுடைய "பிரஞ்சுப் புரட்சி" நூல் அறிமுகம் யேர்மனியில் நடைபெற்றது. பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. திரு.வி.சபேசன், திரு பாக்கியநாதன், திரு ராஜ்சிவா ஆகியோர் நூல் சார்ந்த ஆய்வுரையை நிகழ்த்தினார்கள்.

நூலாசிரியர் க.வாசுதேவன் கடைசியில் ஏற்புரை நிகழ்த்தினார். வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கும் பார்வையாளர்களின் கேள்விகளுக்கும் பதில் கூறினார். பிற்பகலில் திரு ஞானதாசின் "புங்குடுடு தீவு - சிதைவுறும் நிலம்" ஆவணப்படம் திரையிடப்பட்டது. ஆவணப்படத்தின் போது பார்வையாளர்கள் சில கட்டங்களுக்கு உணர்ச்சி வசப்பட்டும், சில கட்டங்களுக்கு கைதட்டியும், சில கட்டங்களுக்கு சிரித்து ஆரவாரித்தும் படத்தை உற்சாகமாக பார்வையிட்டார்கள்.

படங்கள்: வெற்றிமணி

S.J. ASIAN - AFRO STORE



உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப்
பயனடையுங்கள்.

Mannheim
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

Ludwigshafen
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de



Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€69
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
£/€49
14 மாதங்கள்
LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்
ஒரு மாதச் சந்தா
£4.99
மட்டுமே
Google play
Download on the App Store
tv
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
Hisense
amazon fireTV
kindle fire
XBOX
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
Athavan TV
JAYA TV HD
Lyca TV Classic
1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv




## "இது பொய்யல்ல மெய்"

புளுகுவதன் அர்த்தம் சில இடங்களில் புரிந்துகொள்ளப்படாமலே போய்விடுகிறது.
பெருமைகள் பேசப்படும்போதெல்லாம் அதிலும் குறைகளைக் கண்டுபிடிக்க முயல்கின்ற மனோபவம் ஒரு தொற்றுநோயாய் ஆங்காங்கே ஒரு சிலரைப் பற்றிக்கொண்டிருப்பது கவலை தருகிறது. ஆனால் அதற்காக பெருமைகளைப் பேசுவதைத் தவிர்த்துவிடமுடியவில்லை நம்மால்.

நான் எனது சமூகம், எனது இனம் என்று பற்றுதல் கொண்டு அவற்றின் பெருமைகளை எடுத்துவருவதில் ஒவ்வொரு மனிதனும் மகிழ்வுகொள்வ தென்பது இயற்கையானது:
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே என்று தொடங்கி ஆதிமுதல் இற்றைப்பொழுதுவரை நம்மைப்பற்றி நமது பெருமைகள் பற்றிப் புளுக வேண்டும் என்று தொடங்கினேன்.

இறந்தகாலத்தின் பெருமைகளைச் சொல்லத்தான் ஏராளமான ஏட்டுச் சுவடிகள் இருக்கின்றனவே நிகழ்காலப் பெருமைகளை சொல்லலாமே என்று தொடர்ந்தேன்...
இனியும் அதையேதொடர்வதாக எண்ணம்:

எழுத்துலகில் ஒருபடைப்பாளியாய் அரைநூற்றாண்டுக்குமுன் நான் பெற்ற அனுபவங்கள் வேறு. இணையத்தின் வருகைக்குப் பின் இன்று நான் சந்தித்துக் கொண்டிருக்கும் அனுபவங்கள் வேறு. படைப்பாளிகளின் பெருக்கம் அவர்கள் எழுதியதை உடனேயே வாசகர் பரப்புக்கு எடுத்துவரக்கூடிய வசதி இவைகள் தமிழ்ப் படைப்புக்களில் ஒரு முன்னேற்றத்தைக கொண்டு வந்திருப்பது உண்மைதான். இளைய தலைமுறையின் வேகமும் விவேகமும் மகிழ்வைத் தருவதையும் மறுப்பதற்கில்லை.

படைப்பாளிகளை ஆண் பெண் படைப்பாளர்களாகத் தரம் பிரித்து அவர்களது படைப்புக்களை எடைபோடுவதில் எனக்கு உடன்பாடில்லை என்றானபோதும் அதையே நடைமுறைப்படுத்தி விமர்சனங்களை முன்வைப்போரிலிருந்து விலகிக்கொள்ளவும் முடியவில்லை.
புலம்பெயர் மண்ணில் ஆண் எழுத்தாளர்கள் எத்தனைவீதம் இருக்கிறார் களோ அத்தனைவீதம் பெண் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள் என்பது மகிழ்வுதரும் உண்மை. வெறும் வாசகிகளாகமட்டும் இருக்காமல் தத்தம் கருத்துக்களை எழுத்துக்களாய் எடுத்துவர அவர்கள் தயங்குவதில்லை. இந்த முன்னேற்றம் பெருமை கொள்ளத் தக்கதுதான்.

பூவரசு மூலம் ஏராளமான பெண் எழுத்தாளர்களை என்னால் இனம் காண முடிந்திருக்கிறது. இம்மாத வெற்றிமணி மகளிர் தின சிறப்பிதழ் இதன்

## திருமதி சந்திரவதனா செல்வகுமார்



சிறப்பாசிரியராக திருமதி சந்திரவதனா செல்வக்குமாரன் கௌர விக்கப்படுகிறார். என்று வெற்றிமணி ஆசிரியர் சொன்னபோது மகிழந்தேன்

இவரைப்பற்றிய விக்கிபீடியாக் குறிப்பு:

"எழுத்துலக வாழ்வு 1975லிருந்து எழுதிவரும் இவரது எழுத்தார்வம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலமாகத் தொடங்கியது.

இவரது பன்முகப்பட்ட படைப்புகள் வானொலிகள் சஞ்சிகைகள் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்கள் பலவற்றில் வெளிவந்துள்ளன.
இவரது மனஓசை வலைப்பதிவு இவரின் சமூக அரசியல் இலக்கிய மற்றும் சுய உணர்வுகளின் வெளிப்பாடாக விரிந்து கிடக்குமொரு தளம். சிறுகதை கவிதை
கட்டுரையென இவரது பன்முக ஆற்றலை வெளிப்படுத்தி நிற்பன இவரது ஆக்கங்கள்.
இவரின் படைப்புக்கள் எரிமலை, களத்தில், ஈழமுரசு, ஈழநாடு, குமுதம், இளங்காற்று, புலம், சக்தி (பெண்கள் இதழ்), பெண்கள் சந்திப்பு மலர் (பெண்கள் இதழ்), உயிர்ப்பு, பூவரசு (சஞ்சிகை), வெற்றிமணி, முழக்கம், தங்கதீபம், வடலி, குருத்து மாதஇதழ், செம்பருத்தி (சஞ்சிகை) யாழ் (இணைய இதழ்), சூரியன் (இணைய இதழ்), பதிவுகள் (இணைய இதழ்), திண்ணை (இணைய இதழ்) அக்கினி (இணைய இதழ்) யுகமாயினி உட்படப் பல பத்திரிகைகள் சஞ்சிகைகள் மற்றும் இணைய இதழ்கள் போன்றவற்றில் வெளிவந்திருக்கின்றன.

மேலும் சந்திரவதனா செல்வகுமாரன் தொடர்ச்சியாக வலைப்பதிவுகளை நடாத்தி வருகின்றார்.

### மனஓசை

குறிப்பாக மனஓசை இணைய இதழ் (2002 இல் ஆரம்பிக்கப்பட்டது), மனஓசை வலைப்பதிவு (2003 தொடக்கம்), மற்றும் பெண்கள் என்னும் வலைப்பதிவு ஆகியவற்றைக்குறிப்பிடலாம். விக்கிபீடியாவுக்கான இவரது பங்களிப்பும் முக்கியமானது. ஈழத்து எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகள் பலவற்றை விக்கிபீடியாவுக்காக இவர் எழுதியுள்ளதாக அறிய முடிகிறது.

சந்திரவதனா பன்முக ஆற்றல் வாய்ந்தவர். கதை, கட்டுரை, கவிதை என இலக்கியத்தின் பல் பிரிவுகளிலும் தடம் பதித்து வருபவர். இவரைப்பற்றிய மேலதிகத்தகவல்களை விக்கிபீடியா(தமிழ்)வில் எழுத்தாளர்கள் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

இணைய வலைப்பூக்களின் ஆரம்பகாலம்தொட்டு அதனோடு இணைந்து, மனஓசை வலைப்பூமூலம் அவர் ஆற்றிவரும் தமிழ்ப்பணி வியப்புக்குரியது.

சகபடைப்பாளர்களை கலைஞர்களை பாராட்டும் அவரது பண்பும் தமிழ்க் கலை இலக்கியத்தின்மீதான அவரது பற்றுதலும் ஒரு சிறந்த வாசகியாக படைப்பாளியாக உலகத் தமிழ்ப் படைப்பாளிகளின் வாசகர்களின் மனங்களில் அவர் தனககென ஒரு இடத்தைத் தக்கவைத்துக கொண்டிருப்பது வும் பெருமை கொள்ளவைக்கிறது.

ஏற்கனவே அறிமுகமான அவருக்கு புதிதாக ஒரு அறிமுகம் தரத் தேவையில்லை அவரைப்பற்றிப் புளுவதில் ஒரு வாசகனாக படைப்பாளியாக எனக்குப் பெருமைதான்!


„வளரட்டும் அம்மா நின் தமிழாற்றல்!"

ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

அலங்கார உற்ஷவம்
17.05.2018 வியாழக்கிழமை முதல்
28.05.2017 திங்கள்கிழமை வரை

ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09





Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany

அடியவர்
குறைதீர்க்கும்
வெங்கடேஸ்வரப்
பெருமானை
வணங்கி
உங்கள்
குறைதீருங்கள்

## அறம் செய்ய விரும்பு



அறம் பாடுதல் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அறம் என்றால் தர்மம் என்று தானே பொருள்படும். அறம் செய்ய நல்ல மனம் இருந்தால் போதும் தானே. பிறகு எதற்காக புலவர்கள் "சினம் கொண்டு அறம் பாடினார்கள்" என்று சொல்கிறார்களோ தெரியவில்லை. புலவர்கள் அறம் பாடினால் பலித்து விடுமோ என்ற பயத்தினால்தான் முன்னைய காலத்தில் புலவர்களைக் கண்டவுடன் அரசர்களெல்லாம் பொன்னையும், பொருள்களையும் அவர்களுக்கு அள்ளிக் கொடுத்தாரகளோ? அது மட்டுமா தங்கள் அரியாசனங்களுக்கு நிகராக புலவர்களுக்கும் சரியாசனம் கொடுத்து பக்கத்திலேயே வைத்ததுக் கொண்டதற்கும் புலவர்களின் இந்த அறம்தான் காரணமோ?

மற்றையவர்கள் நாக்குகளை விட புலவர்கள் நாக்குகள் சிந்தும் வாக்குகளுக்கு அப்படி என்ன சக்தி இருக்கிறது என்று தெரியவில்லை. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆரம்ப காலத்தில் திரைப்படத்திற்குப் பாட்டெழுதிக் கொடுத்து அதற்கான பணத்தை பெற படாதபாடு பட்டிருக்கிறார் பாடலுக்கான ஊதியத்திற்காக தயாரிப்பாளர் வீட்டுக்கும் அலுவலகத்திற்கும் பல நாட்கள் நடையாய் நடந்திருக்கிறார். பணத்தைத் தராமல் தயாரிப்பாளர் காலம் கடத்தியதால், சினம் கொண்டு ஒரு காகிதத் துண்டில் பாட்டு ஒன்றை எழுதி தயாரிப்பாளரது மேசையின் மேல் வைத்து விட்டு வீட்டுக்கு வந்து விட்டார்.

பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல் வரிகளை வாசித்த தயாரிப்பாளர் கவிஞரின் பாடலுக்கான ஊதியத்தை வீடு தேடி வந்து கொடுத்துவிட்டுப் போனார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய பாடல் இதுதான்

"தாயால் வளர்ந்தேன்
தமிழால் அறிவு பெற்றேன் - நாயே!
நேற்றுன்னை நடுத்தெருவிலே சந்தித்தேன்
நீ யார் என்னை நில் என்று சொல்ல?"

சங்க காலத்தில் மட்டுமல்ல சினிமாக் காலத்திலும் புலவர்களது வார்த்தைகளுக்கு அஞ்சியவர்கள் இருக்கத்தான் செய்யகிறார்கள். கண்ணதாசன் தனது அர்த்தமுள்ள இந்துமதம் புத்தகத்திலும் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். செந்தாமரை படத்திற்காக கண்ணதாசன் எழுதிய பாடல் தான்

"பாட மாட்டேன்
நான் இனிப் பாட மாட்டேன்
பாவலர் செய்த தமிழ்க் கலைப் பாட்டன்றி
வேறு எதையும் - பாடமாட்டேன்" என்று

தொடங்கும் பாடல். அந்தப் பாடலைப்பாடி நடித்தவர் நடிப்பிசைப் புலவர் கே. ஆர்.ராமசாமி. இந்தப் படப் பாடலுக்குப் பின்னர் அவர் எந்தப் படத்திலும் தனது சொந்தக்குரலில் பாடவேயில்லை.

**"கடவுளைச் சாகச் சொல்வதா?**

"கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் - அவன் காதலித்து வேதனையில் சாக வேண்டும்" என்று கண்ணதாசன் ஒரு பாட்டு எழுதினார். "கடவுளைச் சாகச் சொல்வதா?" என்று அந்தப் பாடலைப் பாட முடியாது என ரி.எம்.சௌந்தரராஜன் மறுக்க "கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் - அவன் காதலித்து வேதனையில் வாட வேண்டும்" என்று கண்ணதாசன் மாற்றிக் கொடுத்தார்.

பிற்காலத்தில் பல பாடகர்களின் வருகை ரி.எம்.சௌந்தரராஜனின் நிலையைக் கொஞ்சம் இறக்கி விட்டிருந்தது.

நிலைமைக்கு ஏற்ப கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டிய நிலையில் ரி.எம்.சௌந்தரராஜன் இருந்தார் பாடல் வரிகளில் அவர் தலையிடுவதைக் குறைத்துக் கொண்டார்.

### என் கதை முடியும் நேரமிது

"என் கதை முடியும் நேரமிது
என்பதைச் சொல்லும் பாடலிது" என்று ஒரு பாடலையும், நான் ஒரு ராசியில்லா ராஜா" என்று இன்னுமொரு பாடலையும் ரி.ராஜேந்தர் படத்திற்காக பாடினார். இந்த இரண்டு பாடல்களுக்கும் பின்னர் ஏற்கெனவே ஆட்டம் கண்டு கொண்டிருந்த அவரது இருப்பு இன்னமும் கீழே போய்விட்டது. அதன் பிறகு அந்த இரு பாடல்களையும் அவர் தன் வாழ்நாளில் எங்குமே பாடவில்லை.

திமுகவில் இருந்து விலகி புதுக் கட்சி தொடங்கிய பொழுது கண்ணதாசன் எம்ஜிஆரை கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருந்தார். நிலைமையைச் சாதகமாக்க, எம்ஜியார் கண்ணதாசனை தமிழக அரசின் ஆஸ்தான கவியாக நியமித்தார்.

அந்த நிலையில் கண்ணதாசன் சொன்னார்! "எம்ஜியாருடன் நான் வாழ்நாள் முழுவதும் நடத்திய யுத்தத்தில் கடைசியாகத் தோற்று விட்டேன்" என்று.

- **ஆழ்வாப்பிள்ளை**

நன்றி: மனஓசை






## சண்டைபிடிக்க நேரமில்லாமல் கொஞ்சி குலாவும் கொச்சின் பெண்கள்!



அது ஒரு சேலைப் பூங்கா. அங்கு பூத்திருக்கும் சேலைகள் எண்ணில் அடங்கா. அதே வேளை சேலைகளை விரித்துக்காட்டி பூக்கள் வண்டுகளை அழைப்பதுபோல் அங்கு பல ஆரணங்குகள். பூக்களைப்போலவே பூவையரும். என்றும் காலையில் சிரித்தமுகத்துடன்.


மாலையானதும் வாடிப்போவர்கள்.
வாடவைப்பவர்கள் வடிக்கையாளர்கள்தான்.

சேலை வாங்க வருபவர்களைவிட பார்க்கவருபவர்கள்தான் கடைக்கு அதிகம். அந்தச் சேலைக்கடையில் வேலைசெய்யும் பெண்கள் 500 பேர்.

மனதில் எந்தச் சுமையிருந்தாலும் சுகமாக சிரித்தமுகத்துடன் வேலை செய்யவேண்டும்.

பிரமாண்டமான அந்த சேலைக்கடையில் முன்முகப்பில் இரு புறமும் 50 மேற்பட்ட இருக்கைகள். அவை மனைவிமாரை சேலைக் கடைக்கு அழைத்துவரும் கணவன்மார்கள் காத்திருப்பதற்கான இடம். அந்த இடத்தில் நாய்கள் கட்டிவைப்பதற்கான இடமும் உண்டு. கடைக்குள் நுழைந்த உடனம் வேட்டியுடன் பிள்ளையார்.

நீங்கள் காலணியைக்கழற்றி விட்டு உள் செல்லத் தேவை இல்லை. ஆனால் சேலைகளை எடுத்துக்காட்டும் பெண்கள் மட்டும் காலணியுடன் அங்கு வேலை செய்ய முடியாது.




அவர்களுக்கு உணவு முதல் தங்கும் விடுதி வரை அந்த சேலைக்கடையே கொடுக்கிறது. இரண்டு பெண்களே சேர்ந்து இருக்கமுடியாத ஒரு விடுதியில் எப்படி 500 பெண்கள் அதுவும் அழகிய இளம் பெண்கள். நான் கேட்டே விட்டேன் உங்களுக்குள் சண்டைவராதா என்று.

சிரித்துக்கொண்டே சொன்னாள் நாள் முழுக்க நின்று வேலை செய்த எங்களுக்கு சண்டைபிடிக்க எங்கு திரணியிருக்கும். சிரித்தே பழகிப்போன உதடுகளுக்கு சச்சரவு என்று வந்தாலும் பழகிப்போன சிரிப்பே உதட்டில் தவழுமாம்.

இதைத்தான் சண்டை சச்சருவு எல்லாம் வேலையில்லாதவர்கள் வேலை என்று சொன்னார்களோ என எண்ணத் தோன்றியது.

## நீங்களும் நம்மவர் கடைகளுக்குப் போனால்

## பல போத்தீசுகளையும், சீமாட்டிகளையும் நம்வர்களிடம் உருவாக்கலாம்.




சேலைகளை போன இடத்தில் வாங்கினோம் என்பது வேறு. சேலைவாங்கவென்றே சென்றோம் என்பது வேறு.

பெண்களே விலை சற்று அதிகமாக இருந்தாலும்,நீங்கள் பிற நாட்டிற்கு சேலை வாங்கவென்று சென்று வரும் செலவுடன் ஒப்பிடும்போது இங்கு நான்கு சேலைகள் அதுவும் நல்லது வாங்கலாம். தயவுசெய்து நீங்கள் வாழும் நாட்டில் நம்மவர் கடைகளில் சேலைகளை வாங்க முயலுங்கள். நம்மவர்கள் வளர்ந்தால் நமக்குத்தானே ஆனந்தம்.

நம் சேலைக்கடை உரிமையாளர்கள் பணத்தை இலட்சம் இலட்சமாக செலவு செய்து இந்தியாவில் இருந்து இங்கு இறக்குமதி செய்கின்றார்கள். அவர்கள் நம்மவர்கள். அவர்களுடன் பேரம் பேசுங்கள் ஆனால் அவர்களை மனச்சோர்வடைய வைக்காதீர்கள்.
யேர்மனியர்களைப்பாருங்கள் விடுமுறைக்குச் சென்றால் கடைகளுக்குள் கண்காட்சி நடப்பதாக எண்ணி அலையமாட்டார்கள். நினைவுக்கு சில பொருட்களை சில சில்லறைக்குள் வாங்குவர்கள். ஆனால் பெரிய செலவான பொருட்கள் அனைத்தும் தாம் வாழும் நாட்டில்தான் வாங்குவர்கள்.
நீங்கள் வாழும் நாட்டில் உங்கள் கடைகளில் போய் சேலைகளை வாங்கினால் பல போத்தீசுகளைப்போல் நீங்களும் நம்மவர்களை உருவாக்கலாம். உருவாக்குவோமா?






12 பக்கத் தொடர்ச்சி

# இவங்களாரடா எங்கடை வீட்டு கரியை எடுத்து காசாக்குறது?

இதற்கு காரணங்கள் பல, எமக்கே எமது கடுபிடிப்புகளின் மதிப்பும் அருமையும், அதைப்பற்றிய முழுப் பயனும் தெரியாதது, தெரிந்தவர்கள் சிலரிடம் அதை பலரும் விரும்பிய முறையில் பெரிதாக உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் திறனும் பணமும் இல்லாமை, மேற்கத்தைய நாடுகளில் இருந்து வரும் பொருட்களின் மீதுள்ள மோகம், உள்நாட்டு பொருட்களை உபயோகித்தால் எமது அந்தஸ்து குறைந்து விடுமென்ற தாழ்வு மனப்பான்மை, இப்படி பலவற்றை காரணமாக கூறலாம்.



அன்றொருநாள், நான் வேலைபார்க்கும் இடத்தில், ஒருவரது மேசையில் இரு கொள்கலன்களில், ஒன்றில் வெந்தயமும் மற்றதில் பெருஞ்சீரகமும் போட்டு அதனுள் தண்ணீர் ஊற்றப்பட்டு மூடப்பட்டிருந்தது. எனக்கோ ஆச்சரியம் ஏனெனில் நான் ஒருவன் தான் அங்கு தமிழன் அப்படியிருக்கும் போது வெந்தயத்தை யார் இங்கு கொண்டுவந்தது? அந்த நபர் வந்தவுடன் (ஒரு ஆங்கிலேயர்) அவரிடம் சென்று "இவைகளை ஏன் தண்ணீர் ஊற்றி வைத்திருக்கிறீர்கள்? இனி இதை என்ன செய்ய போகிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர் "அமெரிக்காவில் எனது குடுப்பதினர் வாழ்கிறார்கள் அவர்களில் அநேகமானோர்க்கு நீரிழிவு நோய், எனக்கும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என டாக்டர்கள் சொன்னார்கள், நீண்ட ஆராச்சி செய்தபின் இவைதான் நல்ல மருந்து என கண்டுகொண்டுள்ளேன்,

இப்படி ஊறவைத்த நீரை குடிக்கத் தொடங்கிய பின் எனது உடலில் நல்ல மாறுதல்கள் உண்டாக்கியிருக்கின்றன " என்று கூறி, எனக்கும் இவை பற்றி தெரியுமா? என்று கேட்டார். நானும் "பிறக்கும் போது என்னுடன் இணைந்து கொண்ட சொத்துக்களில் இவையும் சில ஆனால் அதோடு சரி, நான் உங்களைப் போல் மேலதிகமாக எந்த ஆராச்சியும் செய்யவில்லை" என்று கூறினேன்.
அவருக்கு அது மிகவும் ஆச்சரியத்தை கொடுத்தது, கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறானே என்று நினைத்தாரோ என்னமோ!

அண்மைக் காலங்களில் வெந்தயம், மஞ்சள் பொடி, உறையவைத்த தேங்காய் எண்ணை போன்ற வேறு பலவும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்கப்படுவதை அவதாகக்கூடியதாக இருக்கின்றது, இப்படி சிறிது சிறிதாக எமது ஊர்களில் கிடைக்கும் பாரம்பரியங்களையும் கண்டுபிடிப்புகளையும், எமது கவனக்குறைவையும், திறமையிமையையும் காரணமாக வைத்து மேல் நாட்டவர்கள் சந்தைப்படுத்தி பயன் பெறாமல், எம்முள் உள்ள தனவந்தர்களும், உள்நாட்டையும் வெளிநாட்டையும் நன்கு அறிந்த வளர்ந்து வரும் இளம் சமுதாயமும், இப்படியான பொருட்களில் முதலீட்டை மேற்கொண்டு, தாம் மட்டுமன்றி ஊரிலுள்ளவர்களுக்கும் இதன்மூலம் வேலைவார்ப்பளித்து அவர்களின் வாழ்வாதாரத்தையும் உயர்திக் கொள்ளலாம்.

இல்லையெனில் ஆலையில்லா ஊரிலுள்ள இலுப்பம்பூ போல சர்க்கரை வந்தவுடன் இவையெல்லாம் "மேல்நாட்டு மாயத்தில் மறைத்துவிடும், அல்லது வேறு பலரின் கைகளில் காசாகிவிடும்!

எமது சமுதாயம் (எல்லோரும் அல்ல), தமிழன் அதை செய்தான் இதை செய்தான், கல் தோன்றமுன் வந்த மூத்த குடி, பலரைக் காத்த குடி என்று பெருமை பேசியே நேரத்தை வீணடிக்காது செயலில் இறங்கி எமது திறமையை பயனுள்ள வகையில் வெளிக்காட்ட வேண்டும்!

# அன்று டோட்மூண்ட் நகரில் அக்கினி நட்சத்திரம்.

மாதவி

## ஞாபகம் வருதே ஞாபகம் எருதே! பிறைட்டன் கடை...

அக்கினி நட்சத்திரம். 1988 மறக்கமுடியாத படம். யேர்மனிக்கு 1980 களில் வந்தவர்களுக்கு இந்த நட்சத்திரம் பிரமாண்டம். இன்று எத்தனை சங்கர் படம் வந்தாலும் அந்தப்படத்தில் கார்த்திக்கும் பிரபுவும் தோளோடு தோள் உரசிக் கொள்ளும் அந்தக்கட்டம். அந்த நொடியில் இளையராஜா அவர்கள் கொடுத்த இசை அப்படியே இன்னும் காதில் அதிர்கின்றது.
இப்படத்தை அன்று டோட்மூண்ட் நகரில் பிறைட்டன் ஆசியன் சொப் திரையிட்டது. ஆளவந்தான் திரைப்படம் ஒரே நாளில் 4 காட்சிகள்.இரு திரையரங்குகளில். அடிமைப்பெண் ராணித்தியேட்டரிலும்,மனோகராவிலும் ஒரே நீலை ஓட்டியதுபோல் இங்கும் ஆளவந்தான் ஓடியது. இன்று போல் அன்று, பல கடைகள் யேர்மனியில் கிடையாது.
கடைகள் என்றால் பல சரக்குப் பொருட்கள். வீடியோ (தமிழ் திரைப் படங்கள்.பாடல் கசட்டுகள்.பக்திபாடல்கள்) இவற்றுடன் கல்கி குமுதம் ஆனந்த விகடன் தினத்தந்தி, பரீஸ் ஈழநாடு என்று சஞ்சிகைகள் பத்திரிகைகள் அடங்கும். பத்திரிகைகளை வாங்கிப்படிப்போம். முடிந்தால் ஒரு புத்தகத்தை பத்துபேர் கைமாறுவோம்.
இளைஞர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து நலம் விசாரிப்பதும். கரபந்தாட்டம்,கிரிக்கட், உதைபந்தாட்டம் என விளையாட்டுக்கள் உருவாகும் இடமாகவும் பிரைட்டன் முற்றம் திகழ்ந்தது. வீடியோ கடை என்று அழைக் கப்பட்டாலும் அது எமக்கு ஊரில் வீதியோரம் இருக்கும் சனசமூகநிலையம் போன்றே இருந்தது. ஆனால் அந்தக்காலத்து யாழ்ப்பாணம் என்றால் நினைவு வருவதுபோல் இன்றும் அடிக்கடி நினைவு வரும். வெற்றிமணி பத்திரிகைக்கு விளம்பரம் தந்து ஊக்கிவித்தவர். விளம்பரம் கையால் எழுதி அதனைப் படம் எடுத்து பிரசுரித்தேன். இன்றுபோல் போட்டோ சொப்புகள் கிடையாது.
இளைஞர்களுக்கு அன்று பிரைட்டன் என்றால் படங்களும், மாலை வேலையால் வந்து ஒன்றுகூடலும் நினைவு வரும்.






இன்றும் பிறைட்டன் வெற்றிமணி பத்திரிகையை விரும்பி வாசிக்கிறார். இடை இடையே தொலைபேசியிலும் உரையாடுகின்றார்

அன்றும் இன்றும் அந்த அமைதியான முகம் இன்னும் நெஞ்சை அள்ளியவண்ணம் உள்ளது. இடை இடையே நினைவு வரும் முகங்களை மறவாது வெற்றிமணி தரும். யாரையும் மறக்க முடியாது. ஒவ்வொரு வரும் வெற்றிமணிகளே. இளைமையை தாயகத்தில் தொலைத்தவர்களுக்கு தாயகம் ஞாபகம் வரும். இனி யேர்மனியில் தொலைத்தவர்களுக்கு யேர்மனி ஞாபகம் வரும்.








# பிரிந்து கூடிய நாடாளுமன்றங்கள்: பெர்லின்!

ஸ்பிரீ நதி தேடி ! நாடாளுமன்றம் ஏறி ! - பெர்லின்

**தனசேகர் பிரபாகரன்.**

இலண்டன் மாநகருக்கு தேம்ஸ் நதி போல, மாமதுரைக்கு வைகை போல, பெர்லின் நகரின் ஊடே பாய்ந்தோடுகிறாள் ஸ்பிரீ! செக் குடியரசின் எல்லையில் உருவாகி யேர்மனியில் பாய்ந்தோடி இந்த பெர்லின் மாநகருக்கு அணிசெய்கிறாள் இந்த ஸ்பிரீ எனும் ஸ்த்ரீ. பெர்லின் நகரை சுற்றிப் பார்க்கச்செல்வோர் இவளது கையைப்பிடித்தே நகரை சுற்றிவரலாம். சிறிய மற்றும் பெரிய படகுகள் எந்நேரமும் ஸ்பிரீ நதியில் பயணிகளை சுமந்தபடி நகர்வலம் வருகின்றன.

நகர மத்தியில் பெர்லினர் தேவாலயத்தை பார்த்தவாறு ஸ்பிரீ நதி தீரத்தில் அமர்ந்து ஓடும் நதியை பார்த்துக்கொண்டிருக்கின்றனர் அந்த மூன்று பெண்களும் ஒரு ஆணும் ! ஒய்யாரமாய் அமர்ந்து நதியையும் அதில் செல்லும் படகுகளையும் நோட்டமிடும் இவர்கள் 1988 இல் வில்பிரெட் பிட்ஸ்ன்ரேய்ட்டர் என்பார் வடிவமைத்த வெண்கல சிலீலகள். ஒரு காலத்தில் கிழக்கு பெர்லின் இளைஞர்கள் வேனில்காலத்தில் ஸ்பிரீ நதிதீரத்தில் பொழுதை கழிக்கும் நிகழ்வை இது குறிப்பதாக இருக்கலாம், இன்றைக்கு சுற்றுலா வருவோர் பலரும் இங்கு வந்து புகைப்படம் எடுத்துச்செல்கின்றனர்.

## பிரிந்து கூடிய நாடாளுமன்றங்கள்:

பெர்லின் செல்லும் முன்னர் கட்டாயம் காணவேண்டிய இடங்கள் என்று கூகிளிடம் சொடுக்கிய போது அவள் கொண்டு வந்து காட்டிய இடங்களுள் இதுவும் ஒன்று! யேர்மனி நாடாளுமன்றம்.
“ரெய்க்ஸ்டாக்” என்பது யேர்மானிய நாடாளுமன்றம் செயல்படும் கட்டிடத்தின் பெயர், இதன் சிறப்பே இலவசமாக சுற்றுலா பயணிகள் கட்டிடத்தின் மேல் உள்ள கோபுரம் போன்ற இடத்தையும் மேலிருந்து சிலவிடங்களையும் காணலாம் என்பதே, பெர்லின் செல்லும் ஒரு வாரம் முன்பே ஆன்லைனில் பதிவுசெய்து விடவேண்டும், உடன் உங்களுக்கு நேரமும் ஒதுக்கப்பட்டு மின்னஞ்சலும் அனுப்பப்படும்.

பிராண்டன்பர்க் வாயிலில் இருந்து பார்த்தாலே அந்த நாடாளுமன்ற கட்டிடம் பளிச்சென்று தெரியும். பெர்லின் சுவரின் சுவடுகள் அந்த இடத்தையும் கடந்து செல்கின்றன, குறித்த நேரத்தில் கட்டடத்தின் பின்புறம் சுற்றுலா பயணிகள் அனுமதி சீட்டுடன் நிற்க, யேர்மனி போலீசார் அடையாளஅட்டை (பாஸ்போர்ட்) சோதனை மற்றும் பாதுகாப்பு சோதனைக்குப்பிறகு உள்ளே அனுமதித்தனர். முகப்பு வாயிலில் “ஜெர்மானிய மக்களுக்கு (Dem deutschen Volke)” என்று எழுதப்பட்டிருக்கிறது.
பெரிய கொடிக்கம்பத்தில் மூவர்ண யேர்மானிய கொடி பட்டொளி வீசி பறக்கிறது, பிரமாண்ட கட்டிடத்தின் உள்ளே சென்றால் லிப்ட் மூலம் மேலே உள்ள ரெய்க்ஸ்டாக் கண்ணாடி கோபுரத்திற்கு செல்லலாம். இந்த கண்ணாடி மேல்தள கட்டிடம் பொறியாளர் நார்மன் போஸ்டர் என்பவரால் வடிவமைக்கப்பட்டு 1991 இல் கிழக்கு மற்றும் மேற்கு யேர்மனியின் இணைப்பின் நினைவாக தொடங்கப்பட்டது.

இப்போது இது உலக சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இடமாக திகழ்கிறது, பெர்லின் மாநகரை 360 டிகிரி கோணத்தில் பார்க்க ஏதுவாக கண்ணாடி கூடு போன்று அமைக்கப்பட்டு, வட்டவடிவ பாதைகள் சுருளாக மேலே செல்கிறது, இதில் ஏறிச்சென்றால் உச்சியிலிருந்து ஸ்பிரீ நதி, வெற்றிச்சதுக்கம், டிவி கோபுரம் என அனைத்தையும் காணலாம்.

1894 இல் இருந்து 1933 வரை யேர்மனியின் நாடாளுமன்றமாய் செயல்பட்ட இந்த கட்டிடம், பின் 1933 இல் தீவிபத்துக்குள்ளானது, பின் உலகப்போர் சமயத்து மிகவும் பழுதடைந்தது. பனிப்போரின் போது யேர்மனி, “கிழக்கு யேர்மனி” “மேற்கு யேர்மனி” என்று பிரிந்தபோது, பெர்லின் நகரும் இரண்டாக பிரிக்கப்பட்டது இதில் இந்த கட்டிடம் மேற்கு பகுதிக்குள் வந்தது, 1949 இல் மேற்கு யேர்மனியின் தலைநகர் பாண் நகருக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து நாடாளுமன்றமும் செயல்பட்டது, கிழக்கு யேர்மனியின் நாடாளுமன்றமும் வேறுஇடத்தில் இருக்கவே இந்த கட்டிடம் கவனிக்கப்படாமல் இருந்தது.

பனிப்போரின் இறுதியில் ஒன்றிணைந்த யேர்மனி உருவாகிய போது இந்த கட்டிடமும் பொலிவு பெற்று மீண்டும் நாடாளுமன்றமாக செயல்படத் தொடங்கியது. யேர்மனியின் தலைநகர் பெர்லின் செல்வோர் கட்டாயம் ஸ்பிரீ நதி தீரத்தில் இந்த எழிலார்ந்த கட்டிடத்தையும் கண்டுவாருங்கள்.

மூன்று பெண்களும் ஒரு ஆணும் !










வெகு விரைவில்...
SJ SOUTH INDIAN FOOD
SOUTH INDIAN & SRI LANKAN
RESTAURANT
G2,21-23
68159 Mannheim
Mobil:0173 68 28 990



# திருமந்திரமும் வாழ்வியலும் 26

[சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி]

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகள் (பகுதி 2)



திருமந்திரம் பாடல் 1441

"நான்என்றும் தான்என்றும் நாடிநான் சாரவே
தான்என்று நான்என்று இரண்டிலாத் தற்பதம்
தான்என்று நான்என்ற தத்துவம் நல்கலால்
தான்என்றும் நான்என்றும் சாற்று கில்லேனே"

நான் தேடி அடையவேண்டியது, சிவபெருமான் திருவருள் துணையே என்று உணர்ந்து அதை நாடி நான் அடைய, தான் வேறு நான் வேறு என்று இரண்டாக இல்லாத பரம்பொருள், தான் (சிவன்) என்பது நீயேதான் (நான்) என்ற உண்மையை உணரச் செய்ததால், சிவன் என்றும், நான் என்றும் தனித் தனியே பிரிந்து செல்ல முடியாத பரிபக்குவம் நான் பெற்றுவிட்டேன்.

சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் ஞானத்திற்கு (முத்திக்கு) வழியாகும். திருமந்திரம் பாடல் 1446

"பத்தர் சரிதை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள் வேடத்தாகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் சென்றுஎய்து வோர்களே"

சரியை வழிச் சென்று இறைவழிபாடு செய்யும் பக்தர்கள் ஆலய வழிபாட்டில் நாட்டமுடையவர்கள். கிரியை வழியில் செல்லும் அடியவர்கள் விபூதி, உருத்திராக்கம் ஆகிய புற வேடங்கள் தாங்கி நிற்பவர்களாவர். புலனடக்கம் முதலான புனிதமான அட்டாங்க யோகப் பயிற்சி மேற்கொண்டிருப்பவர்கள் மேலான யோகநிலை பெற்றவராவார். சித்தர்கள் எனப்படுவோர் சிவஞான சிந்தனையால் பரம்பொருளைத் தன்னுள் கண்டு ஆனந்தப் பரவசம் எய்தி அதிலேயே இலயித்திருப்பவராவர்.

1. சரியை தாசமார்க்கம் (இறைவனுக்கு அடிமையாகத் தொண்டு செய்வது. அப்பர் பெருமான் இம்மார்க்கத்தையே தேர்வு செய்து முத்தியடைந்தார். உலகவாழ்வில் ஈடுபாடு கொண்டிருக்கும் மக்கள், அது நிலையற்றது என உணர்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்வது சரியை எனப்படும். ஆலயத் தொண்டுகள் செய்து, இறைவன் பெருமையைப் பாடுவதும் சரியை நெறியாகும். உலகவாழ்வில் முழுமையாக ஈடுபடுபவர் சரிகையாளர்கள். திருமந்திரம் பாடல் 1443

"நேர்ந்திடு மூல சரியை நெறி இதென்று
ஆய்ந்திடும் காலங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத்து உயிரதே"

முத்தியாகிய பேரின்ப நிலை அடைவதற்கான மூல காரணமாகவும், முதன்மையான வழியாகவும் இருக்கின்ற சரியை நெறி இன்னதென்று ஆய்ந்தறிகின்ற, நுணுகி உணர்ந்திடும் சந்துரு ஆகிய என் அன்புச் சீடர்களே! கேட்டுக் கொள்ளுங்கள். பூவுலகில் உண்மை உணர்ந்திடும் சுத்த சைவருக்கு உயிர் போன்றதே இந்தச் சரியை நெறிதான்.

2. கிரியை சற்புத்திர மார்க்கம் மகன் என்ற உறவுடன் தொண்டு செய்வது. திருஞானசம்பந்தப் பெருமான் இம்மார்க்கத்தையே பின்பற்றி முத்தியடைந்தார். உடல் பற்றை நீக்கி இறைவனைத் துதித்தால் அவனை அடையலாம் என்பதை உணர்ந்து செயல்ப்படல் கிரியை எனப்படும். எல்லா இடத்திலும் சிவன் நிறைந்துள்ளான் என்னும் மனத்தெளிவோடு இறைவன் திருவடியைச் சரனடைதல் கிரியை நெறியாகும். உலக நினைவற்று உள்ளமொன்றி வழிபாட்டினை மேற்கொள்பவர் கிரியையாளர்கள். திருமந்திரம் பாடல் 1451

"பத்துத் திசையும் பரம்ஒரு தெய்வம் உண்டு
எத்திக்கில் அவர்இல்லை என்பதில் மலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரண்எனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே"

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு, வடகுழக்கு, மேல், கீழ் எனப் பத்துத் திசைகளிலும் பரவிநீக்கமற நிறைந்திருப்பவன் பரம்பொருள். எங்கே அவர் இல்லை?, எல்லா இடங்களிலும் இருக்கிறார். எனவே பூங்கொத்துக்களைக் கொண்டு அவர் திருவடிகளைச் சரண் அடைந்து, அலைகள் கடலில் ஒன்றன் பின் ஒன்றாகத் தாவி வருதல் போல, துன்பவினையால் தொடரும் இப்பிறவியாகிய பெருங்கடலில் விழாமல், தப்பலாம் என்பதை உணர்க. (மலர் இட்டுச் செய்யும் இறைவழிபாடு கிரியை)

3. யோகம் சக மார்க்கம் நட்புரிமையுடன் பழகித் தொண்டாற்றுவது. சுந்தர மூர்த்தி நாயனார் இம்மார்க்கத்தையே பின்பற்றினார். கிரியையாளர்கள் மேல் இறை அன்பு கூடும்பொழுது ஆன்மா யோகநிலையை நாடும். இந்நிலையில் இவர்கள் மூலாதாரத்தில் உள்ள குண்டலினியோடு பிராணனைக் கூடச் செய்து பின்பு சிவனோடு பொருந்தச் செய்வர். யோகியர்க்கு இந்த யோக நிலையில் உடல் உணர்வுகளும், பிற சிந்தனைகளும் அற்றுவிடும். திருமந்திரம் பாடல் 1457


"நெறிவழியே சென்று நேர்மைஉள் ஒன்றித்
தறி இருந்தால்போல் தம்மை இருத்திச்
சொறியினும் தாக்கினும் துண்ணெண்று உணராக்
குறி அறிவாளர்க்குக் கூடலும் ஆமே"

மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்கள் வழியாகப் பிராணனை மேலே செலுத்தி நெற்றிக்கு நேர் புருவ மத்தியில் மனதை நிற்கச் செய்து, அடித்த கட்டுத் தறி போல் ஒரே இடத்தில் அசைவற்று தம் உடலை இருக்கச் செய்து, பிறர் வந்து உடலைச் சொறிந்தாலும், அடித்துத் துன்புறுத்தினாலும் இவை எதையும் உணராது தாங்கள் அடைய வேண்டிய இலட்சியமே குறியாக இருந்து தியானம் செய்பவர்க்கு யோகம் எளிதாகக் கைகூடும்.

4. ஞானம் சன்மார்க்கம் இறைவனுடன் வேற்றுமை இன்றிக் கலத்தல் மாணிக்கவாசகப் பெருமான் இம்மார்க்கத்தையே பின்பற்றினார். இறைவனை முழுமையாக அறிந்து கொள்வது ஞானம் ஆகும். சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றால் சிறிது சிறிதாகச் சிவானந்தத் தேறலை நுகர்ந்த ஆன்மா பேரின்பமாகிய இறையின்பத்தில் திளைப்பது ஞானநெறியாகும். திருமந்திரம் பாடல் எண் 1467 இல்

"ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்கசமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே"
ஞானத்தில் உயர்ந்தவர்கள் மனிதர்களில் மிகவும் உயர்ந்தவர்கள்








# பெண் ஒரு அதியப்பிறவி

**கௌசி**

மகளிர் தினம் என்று எழுதுவதற்கு ஆரம்பிக்கும் போதே மனதினுள் உற்சாகம் பொங்குகின்றது. ஏன்? நான் ஒரு பெண் என்பதனாலா? இல்லை பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் பெறும் பேறு இருக்கின்றது என்னும் பெருமையினாலா? எதை எழுதுவது? அவள் தாய்மைப் பண்பையா? பாசத்தின் பெருமையையா? அவள் உற்சாகத்தையா? அவள் மனத்தைரியத்தையா? அவள் உறவுகளைக்கட்டிக்காக்கும் உன்னதத்தையா? இவற்றுக்கெல்லாம் காரணத்தையா? இல்லை இத்தனை பண்புகளையும் ஆட்டிப்படைக்க நினைக்கும் ஆண்மையையே இன்று மகளிர் தினம் கொண்டாட வைக்கும் திறமையையா? எதுவாக இருந்தாலும் என் மனப்பதிவுகளை இப்பதிவில் மனம்பதிக்கின்றேன்.




ஆண்கள் பல விடயங்களை மனதில் வைத்திருப்பதில்லை. ஆனால், பெண்கள் அதிக விடயங்களை மனதில் பதித்து உறவுகளைப் பேணுகின்ற உன்னத பணிகளைச் செய்கின்றார்கள். பிறந்தநாள், திருமணநாள், பிள்ளைகளின் பாடசாலை விடயங்கள் போன்றவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கும் பெரும்பணி பெண்களுடையதாகவே இருக்கின்றது. ஆண்களை விட பெண்களுக்கு ஞாபகசக்தி அதிகம் என்பதை விளக்குவதற்காக why man never remember and women never forget என்னும் நூலை அமெரிக்காவிலுள்ள டாக்டர் Marianne J. Legato என்பவர் ஆய்வு செய்து எழுதியுள்ளார். பெண்கள் ஒரு விடயத்தை அறிகின்ற போது அதனை பிறரிடம் கூறவேண்டும் என்னும் எண்ணத்தில் உள்வாங்குவதினால் அதனை அப்படியே ஞாபகத்தில் வைத்திருக் கின்றார்கள். ஞாபகசக்தியை வளர்ப்பதற்குரிய ஒரு உத்தியும் அதுவே. ஒரு விடயம் எமது ஞாபகத்தில் பதிக்க வேண்டுமானால், அதனைப் பிறருக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும். இந்தத் தன்மையே பெண்களுக்கு ஞாபகசக்தியை மேம்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது.

ஒரு தாய் எத்தனை காததூரம், எவ்வாறான இரைச்சல். அத்தனைக்கும் மத்தியில் தன் குழந்தை அழும் சத்தத்தை ஊகித்துக் கொள்வாள். இதுவே தாய்மைக்கு அடையாளமாக இருக்கின்றது. அதற்குக் காரணம், ஆணின் மூளையைவிடப் பெண்ணின் மூளை அளவில் சிறியது. அதனால், ஒலிகளைத் துல்லியமாகக் கேட்கும் திறன் மிக்கது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இதனால்த்தான் என்னவோ ஆண்கள் பெண்கள் எது கேட்டாலும் தெரியாதவர்கள் போல் இருப்பதும், எத்தனை தடவை சொன்னாலும் செவிடன் காதில ஊதின சங்குபோல் இருக்கின்றீர்கள் என்று பெண்கள் ஆண்களை கேட்பதும்!

ஒரு தாயானவள், ஓர் இரவு தனது பிள்ளை உணவருந்தவில்லை என்றால், உயிரே போய்விடுமாப்போல் கவலை கொள்வாள். தந்தையோ பசித்தால் சாப்பிடுவார்கள் தானே என்று கூறிவிட்டு மறுவேலையைப் பார்க்கத் தொடங்கிவிடுவார். ஆனால், பிள்ளைகளுக்கு ஏற்படும் கவலைகளையோ, நோய் வேதனைகளையோ, தனக்கு ஏற்பட்டதைப்போல் மனதில் போட்டு அதனைப் பற்றி எப்பொழுதும் சிந்தித்துக் கவலை கொள்கின்ற தன்மை தாய்மைக்கே சொந்தமானது.

ஒரு பெண்ணின் மகத்துவத்திற்கும் பெண்மையின் மனத்தைரியத்துக்கும் எடுத்துக்காட்டாக அமைவது எதுவென்றால், பெண்களுக்கு ஏற்படும் பிரசவவலி 3 தொடக்கம் 4 மணித்தியாலங்கள் தொடர்ந்து இருக்கும். ஒவ்வொரு 10, 20 நிமிடங்களுக்கு ஒருமுறை இடுப்புப் பகுதியில் தொடர்ந்து இழுத்துப் பிடித்துப் பின் விடுவதாக இருக்கும். ஒரு மனிதன் தாங்கும் வலி 45 அலகுகளாகவே இருக்க, ஒரு பெண்ணுக்குப் பிரசவவலியானது 52 அலகுகளாக இருக்கின்றது. இது 20 எலும்புகள் ஒன்றாக உடைவதுபோன்ற வலியுடையது. இவ்வாறு வலி பொறுத்து குழந்தையைப் பிரசவித்துவிட்டு மீண்டும் அடுத்த குழந்தைக்குத் தயாராகும் மனத் தைரியம் பெண்ணுக்கு உண்டு. ஆனால், ஆண்களோ ஒரு தடிமல் வந்தால் போதும் இறக்கும் நிலைமையில் இருப்பது போல் வீட்டையே இரண்டாக்கிப் போடுவார்கள். ஒரு தடிமலையே தாங்க முடியாதவர்கள் இந்த இடுப்புவலி வந்தால் என்ன செய்வார்களோ!

ஒரு விடயத்தை அவதானித்தல், மனநிலை, கவலை போன்றவற்றை வெளிப்படுத்தல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றில் ஆண்களின் மூளையை விடப் பெண்களின் மூளையே தெளிவாகச் செயற்படுவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வுகளின் மூளை தெரியப்படுத்தியுள்ளார்கள். ஒரே சமயத்தில் பல விடயங்களை உள்வாங்கும் தன்மையும் பெண்களுக்கே உண்டு. குசழவெயட ஊழசவநஒ என்னும் மூளையின் முன்பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரிக்கும் போது உள்ளுணர்வு, சுயகட்டுப்பாடுகள் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். பிள்ளைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே வீட்டுக் கணக்கை சரிபார்ப்பது, சமையல் செய்வது, கணவனின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பது போன்றவற்றை ஒரே நேரத்தில் செய்கின்றாள். ஒன்றைச் செய்யமாட்டோம் என்று உறுதி கொண்டார்கள் என்றால், உயிரே போனாலும் பிடிவாதத்திலிருந்து இறங்கப் போவதில்லை. இதனாலேயே இவர்களைப் பிடிவாதகாரர்கள் என்று ஆண்கள் திட்டித் தீர்க்கின்றார்கள்.

உலகுக்கே ஒன்றரை வரிகளில் பொதுமறை தந்த திருவள்ளுவர் 4 வரிகளில் ஒரு பாடல் தனது மனைவிக்காகப் பாடியுள்ளார்.

"அடியிற் கினியாளே அன்பு உடையாளே
படிசொல் தவறாத பாவாய் - அடிவருடி
பின் தூங்கி முன்னெழும் பேதாய்
இனிதா(அ)ய் என்தூங்கும் என்கண் இரவு"

என்று தன் மனைவியின் இறப்பில் உலகப்பொதுமறை தந்த மகாமுனிவரே பாடியிருக்கும் போது பெண்ணின் பெருமையினைப் புரிந்தும் புரியாத ஆண்களோ இங்கு அதிகம்.

ரேடியத்தை உலகுக்களித்த மேரிகியூரி முறையான கல்வி வசதியில்லாத நிலையிலேஅம்மையார், யே 18ம் நூற்றாண்டு கரோலின் கர்ஷேல் என்னும் விண்வெளி வீராங்கனை 3 புதிய நட்சத்திரக்கூட்டம், 8 வால்நட்சத்திரம் மற்றும் பல கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளார். ஆயினும் ஐரோப்பிய மண்ணில் கூட அடக்குமுறை தலைவிரித்தாடியது. 16 ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் சூனியக்காரிகள் என்று உயிருடன் தீ வைத்துக் கொழுத்தப்பட்டனர். அவர்கள் செய்த சூன்யம் என்னவென்றால், ஆண்மருத்துவர்கள் இருக்கும் போதே நோயுற்றவர்களைத் திறமையான முறையில் சிகிச்சையளித்து குணமாக்கியமையே ஆகும்.

தொடர்ச்சி 29 ம் பக்கம்




ரியல் சுவை TM
டின் மீன்
உங்களுக்குத் தெரியுமா..?
சிலி நாட்டு தரமான 'ஜேக் மெக்கரலு'க்கான பணத்தை கொடுத்து மலிவான சீன மெக்கரல்தான் வாங்குறீங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?
425g எடை கொண்ட மீன் ரின்ல 300g நிகர எடை கொண்ட மீனுக்கான பணத்தை கொடுத்து 285g தான் வாங்குறீங்கன்னு உங்களுக்கு புரியுமா?
REAL SUVAI
JACK MACKEREL
IN NATURAL JUICE WITH SALT ADDED
ஜேக் மெக்கரல்
ரியல் சுவை
JACK MACKEREL
IN TOMATO SAUCE
ஜேக் மெக்கரல்
STOP!
இனியும் ஏமாற வேண்டாம்..!
தேர்ந்தெடுக்கப்பட்ட சுவையான சிலி நாட்டின் ஜேக் மெக்கரல் டின் மீன் இரு சுவைகளில் இப்பொழுது ஐரோப்பா முழுவதும்...
இதயத்தை பாதுகாக்கும் OMEGA3 அடங்கியுள்ளது...
OMEGA 3 RICH
ALL RIGHTS COPYRIGHT RESERVED
'CHILE' நாட்டோட தயாரிப்பான்னு பாருங்க ! கடைக்காரர்கிட்ட 300G நிகர எடை இருக்கான்னு கேளுங்க !
Adchaya International
உங்கள் ஆர்டர்களுக்கும் வர்த்தக தொடர்புகட்கும் :
ADCHAYA INTERNATIONAL, Alter Hellweg -108 , Halle No.8, 44379 Dortmund, Germany. Tel : +4923113091030 , +4917663092804 , www.anjaara.com


# TAMIL-PARCEL.de

# இலங்கைக்கு பார்சல் அனுப்ப விரும்புகிறீர்களா?

**Tamil-Parcel.de ஐ நாடுங்கள்!**

- ✓ **60 x 40 x 40 cm** அளவு பெட்டிகள்
- ✓ பெட்டியின் உள்ளடக்கம் **40Kg**
- ✓ பெட்டி மற்றும் டேப் றோல் இலவசம்
- ✓ நீங்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பார்சல்கள் தாயகத்தில் உள்ள உங்கள் இல்லங்கள் தேடி நேரடியாக கொடுக்கப்படும் (Door-to-Door Delivery)



ஒவ்வொரு பார்சலும் 300€ காப்புறுதியுடன் அனுப்பப்படும்

3 பார்சல்கள் அனுப்பினால் 4ஆவது பார்சல் இலவசம்

**BEST PRICE PROMISE**

ஒரு பார்சல் அனுப்பும் கட்டணம் **55€** மட்டுமே

**PARCELS TO COLOMBO ONLY 50€**

தொடர்புகளுக்கு நாடுங்கள்:

**www.tamil-parcel.de**

**0176 56841676**
**0176 24889539**

# "ஈழகேசரி" நா.பொன்னையா அவர்களுக்கு
# வசாவிளான் மத்திய கல்லூரியில் சிலை நிறுவி கௌரவிப்பு!



வசாவிளான் மத்திய கல்லூரி நிறுவனர் ஈழகேசரி அமரர்.நா.பொன்னையா அவர்கள்

நா. பொன்னையா (சூன் 22, 1892 - மார்ச் 30, 1951) ஈழத்துப் பத்திரிகையாளரும், பதிப்பாளரும், சமூக சேவையாளரும் ஆவார். தாய்மண்ணில் ஈழகேசரி பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

நா. பொன்னையா யாழ்ப்பாணம், குரும்பசிட்டியில் ப. நாகமுத்தர், தெய்வானைப்பிள்ளை ஆகியோருக்கு நான்காவது, கடைசி மகவாகப் பிறந்தார். இவரது குடும்பம் வேளாண்மையை வாழ்க்கையாகக் கொண்டது. தந்தைவழிப் பாட்டனார் பரமநாதர் சட்டம்பியார். பொன்னையா அவரது ஊரில் உள்ள மகாதேவ வித்தியாசாலையில் கல்வி கற்றார்..

அச்சுத் தொழில்

1918 இல் ரங்கூன், மலாயா ஆகிய இடங்களுக்குச் சென்றார். 1920 இல் கிழக்கு ரங்கூன் 92-ஆம் வீதியில் இருந்து வெளிவந்த சுதேச மித்திரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னையில் சில காலம் வசித்து கதிரேசபிள்ளை என்பவருடன் சேர்ந்து தந்திச் சுருக்கெழுத்துத் திரட்டு நூலை ஆக்குவதில் முக்கிய பங்காற்றினார். 1925 இரங்கூனில் இருந்து இலங்கை திரும்பி, தெல்லிப்பழையில் யேசுதாசன் என்பவரின் அமெரிக்க மிசன் அச்சியந்திரசாலையில் பணியாற்றினார். அக்காலகட்டத்தில் அமெரிக்க மிசன் பாடசாலையில் கைத்தொழில் ஆசிரியராகவும் பணியாற்றினார். மகாவித்துவான் சி. கணேசையரிடம் தமிழ் கற்று யாழ்ப்பாணம் ஆரிய-திராவிட பாசாபிவிருத்திச் சங்கம் நடத்திய பிரதேச பண்டிதர் சோதனையில் தேர்ச்சி பெற்றார்.

பின்னர் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாரப் பிரவேச சோதனையிலும் சித்தியடைந்தார்.1929 இல் திருமகள் அழுத்தகம் அச்சுக்கூடத்தையும் ஆரம்பித்தார்.



ஈழகேசரி அமரர் நா.பொன்னையா அவர்கள்

1892-1951

திருமகள் அழுத்தம் ஊடாக 1939 இல் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தை சி. கணேசையரின் உரை விளக்கக் குறிப்புடன் சி. வை. தாமோதரம்பிள்ளையின் நினைவாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

**பத்திரிகைத் தொழில்**

1930 சூன் 22 இல் சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் ஈழகேசரி வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். 1935 முதல் ஈழகேசரியின் ஆண்டு மலர்களை உயர்ந்த முறையில் வெளியிட்டு வந்தார். 1933 இல் Ceylon Patriot என்ற ஆங்கில வாரப்பத்திரிகையை எஸ். சி. சிதம்பரநாதன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு நடத்தி வந்தார.

1941 ஆம் ஆண்டில் Kesari என்ற ஆங்கில வார இதழை ஹன்டி பேரின்பநாயகம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு சில ஆண்டுகள் நடத்தி வந்தார்

தொடர்ச்சி 30ம் பக்கம்

# பெண் ஒரு ……

28 ம் பக்கத் தொடர்ச்சி....

இவ்வாறு பெண்மையின் இயல்பான ஞானத்தில் பொறாமை கொண்ட ஆண்வர்க்கம், பெண் இனத்தின் அடக்குமுறையை வளர்த்து கொண்டிருந்த போது 1910ம் ஆண்டு டென்மார்க்கிலுள்ள முழீநஒயபநீ என்னும் இடத்தில் ஊடயசயணநவமலை என்பவர் ஒரே தொழில்புரியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான வருமானம் கிடைத்தல் வேண்டும், கர்ப்பம் அடைந்த பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படல் வேண்டும், பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படல் வேண்டும். என்னும் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்தார். இவர் தூக்கிய போர்க்கொடியே மகளிர் தினத்திற்கு அடிகோலியது.

1917ல் இரஷ்யாவிலுள்ள ளுயமெவிநவநசளடிரசப என்னும் இடத்தில் ஆரம்பித்த பெண் ஆடைத்தொழிலாளிகளின் வேலைநிறுத்தத்தை நினைவுகூருமுகமாக 1921 பங்குனி 8 ல் சர்வதேச மகளிர்தினம் பிரகடனப் படுத்தப்பட்டது. தற்பொழுது வருடாவருடம் உலகலாவிய ரீதியில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

"நம்மோடு உயிர் கொண்டு வாழ்ந்தவரை
மயிர் அளவும் பயன் செய்யாமல் நீர்த்தபின்னே
தீயதை வைக்குமுன் மயிரதை சரைப்பதால்
ஏதொன்றும் பயனுன்டோ"
என்று பாடினார் ஒரு சித்தர்.

அதனால், உங்களைக் கவர்ந்த சாதனைப் பெண்மணி அன்னை திரோசாவோ Angela Merkel லோ இல்லை. நீங்கள் சந்தோசமாய் இருந்தால் சந்தோசமாய் இருப்பாள். நீங்கள் உடல்வருந்த துடித்துப் போவாள். உங்கள் கவலையைத் தன் கவலையாய் எடுத்துக் கொள்வாள். உங்களை சாதனை மனிதனாய் ஆக்கி வைப்பாள்.

காலம் முழுவதும் உங்களைப் பற்றியே நினைத்திருப்பாள். அவள் தான் உலகத்திலே உங்களைக் கவர்ந்த பெண்மணி.





# ரஜினி - கமல் இருவரும் இன்று நீயா நானா? நிகழ்ச்சிபோல் ஆகிவிட்டார்கள்.



யாரும் எதிர்பார்க்காத நிலையில் அரசியலில் குதித்த நடிகர் கமல்ஹாசன் மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை அழைத்து அவர் முன்னிலையில், தொடங்கி விட்டார். அரசியலுக்கு வருவார் என இரு தசாப்தங்களாக எதிர்பார்க்கப்பட்ட ரஜினிகாந்த் இன்னும் கட்சி துவங்காமல் இழுத்தடித்து வருவது தனது திரைப்பட வெளியீடுகளுக்குத்தானா என்ற ஐயங்கள் எழுந்துள்ளன.

ரஜினி நடிப்பில் எந்திரன் 2வது பாகமும், காலா திரைப்படமும் வெளியாக வேண்டியுள்ளது.அதற்கு முன்பாக அரசியலில், அதிரடியாக ஏதாவது செய்தால், படங்களுக்கு பாதிப்பு வருமோ என ரஜினிகாந்த் யோசிப்பதாக கூறப்படுகிறது. ரசிகர் மன்ற நிர்வாகிகளை சந்தித்தபடி காலம் தாழ்த்தி வருகிறார் ரஜினிகாந்த். அதுமட்டுமன்றி அடுத்த புதுப்படத்திற்கான அதிகாரபூர்வ அறிவிப்பும் வந்துள்ளது. ரஜினி நடிக்கவிருக்கும் அடுத்த படத்தை "பீட்சா", "ஜிகர்தண்டா" உள்ளிட்ட படங்களின் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்குகிறார். இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், அது காலம் வேறு, அவர் செய்த சேவை வேறு. அரசியலுக்கு வருவதாக அறிவிப்பதிலேயே வெகுகாலம் கடத்திய, ரஜினிகாந்த், இப்போது கட்சி துவங்குவதிலும் காலம் தாழ்த்துவதாக அதிருப்தியில் உள்ளனர் ரசிகர்கள்.

**இதுவேற!!!!**

கமல் கட்சியின் பெயர் நீதிமன்றத்தின் மாண்பையே கெடுக்கும் வகையில் இருப்பதால் அதற்கு தடை கோரி தேர்தல் ஆணையத்திடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஏழை,எளியோர், நடுத்தர மக்கள் நல சங்கம் என்ற அமைப்பின் சார்பில் தமிழக தலைமை தேர்தல் ஆணையருக்கு புகார் மனு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது. நடிகர் கமல் தொடங்கியுள்ள (21.02.02018) புது கட்சிக்கு மக்கள் நீதி மய்யம் என பெயர் அறிவித்துள்ளனர். உச்சநீதிமன்ற அங்கீகாரமுள்ள மக்கள் நீதிமன்றத்தை அணுகும் பொதுமக்களை திசை திருப்பும் வகையிலும் குழப்பும் வகையிலும் மக்கள் நீதி மய்யம் என நடிகர் கமல் தன் கட்சிக்கு பெயரிட்டுள்ளார்.திரைப்படத் தலைப்புக்கு மட்டுமல்ல தமிழ் நாட்டில் அரசியல் கட்சிப் பெயருக்கும் வழக்கு தொடர்கிறது. ரஜினி கமல் இருவரும் இன்று நீயா நானா நிகழ்ச்சி போல் ஆகிவிட்டார்கள். ஒரு நகரத்தில் ஆதரவாளர்களைக் குவிப்பது சுலபம். தமிழ் நாடு முழுவதும் குவிப்பது?

தொடர்ச்சி 29 ம் பக்கம்

**"ஈழகேசரி" நா.பொன்னையா அவர்களுக்கு ...**

1936 முதல் கிராம சங்கத்தில் உறுப்பினராக இருந்து, பின்னர் 1946 முதல் இறக்கும் வரை மயிலிட்டி கிராமச் சங்கத்தில் தலைவராக இருந்தார். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் உணவுப் பற்றாக்குறை நிலவிய போது 1941 இல் வயாவிளானில் 12 ஏக்கர் காணியை வாங்கி பெருமளவு உணவுப் பொருள் உற்பத்தி செய்தார். அவ்விடத்தில் கைத்தொழில் பாடசாலை ஒன்றை நிறுவ முயற்சிகளை மேற்கொண்ட போது, உள்ளூர் பொதுமக்கள், மற்றும் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், அவ்விடத்தை வயாவிளான் மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்காகக் கையளித்து பெருமளவு நன்கொடையும் அளித்தார். குரும்பசிட்டியில் சன்மார்க்க சபை என்னும் பெயரில் ஒரு சங்கத்தை 1934 ஆம் ஆண்டில் நிறுவினார. நா. பொன்னையர் 1951 மார்ச் 30 அன்று அதிகாலை 4:30 மணிக்குக் காலமானார். அன்னாரின் சேவையைக் கௌரவிக்குமுகமாக வயாவிளான் மத்திய கல்லூரியில் அவர் சிலை நிறுவி கௌரவித்தனர். (தை.2018)

மேற்கோள்கள்

"செந்தமிழ் வளர்த்த தேசபக்தன்". ஈழகேசரி 21 (35): பக். 1. ஏப்ரல் 1 1951.

கனக செந்திநாதன் (1968). ஈழம் தந்த கேசரி. பக். பக். ஏ.

நன்றி விக்கிப்பீடியா

படம் உதவி: சுபத்திரா.வரதன்





ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

## 4ம் ஆண்டு நினைவு அஞ்சலி



**அமரர் தியாகராஜா.தனபாலசிங்கம்.**
திதி 16.02.2018
பிறப்பு: 24.04.1961 இறப்பு 01.03.2014

ஆண்டுகள் நான்கு ஆனதப்பா ஆறவில்லை
நாங்கள் இன்னும். அன்பிற்கே சாவு என்றால்
அகிலமே தாங்காது அப்பா. வான் புகழ்கொண்ட
வளமான ஆலயங்கள். தெவிட்டாத
இசைக்குலங்கள். வேர் கொண்ட எழுவை
மண்ணை எப்படி மறந்தீர்கள் அப்பா.
மூத்தமகன் என் சொத்து. மறந்தாயோ அம்மாவை.
வெறுத்தாயா மனைவி. மகளை? கண்விழித்து
மூடுமுன்னம் காலன் உங்களைக் கவர்ந்ததேனோ?
சோதனைகள் வரும்போது சோர்ந்துவிடக்கூடாது
என்று தினமும் கூறும் வார்த்தை, எம் காதில்
ஒலித்துக்கொண்டே இருக்குது அப்பா! எனக்கும் என்
அம்மாவிற்கும் என்றும் துணையாக நின்று
வழிநடத்துங்கள் அப்பா. என்றும் உங்கள் காலடியில்
ரோஜாப்பூவாய்ச் சொரிந்து நிற்கின்றோம். உங்கள்
அன்பு மனைவி **பாரதா.**
மகள் **கார்த்தனா** மாவிட்டபுரம்.

## 2 வது ஆண்டு நினைவு அஞ்சலி



**ஜெகநாதன் மாலதி:** திதி:13.02.2018
பிறப்பு: 30.09.1996 இறப்பு: 07.03.2016

மலர்ந்து மணம் வீசி நின்ற சிறுமலரே
உன்னை மனமுவந்து பறித்துவிட்ட
விதியுமென்ன? கலகலப்பு ஊட்டி நின்ற
ஆசைமச்சாள். உன்னைக் காலனவன்
அழைத்துவிட்ட விதியுமென்ன?
கருவறையில் சுமந்தவளைக்
கதறவிட்டு உன்பிரிவு தாங்காது.
உன்தந்தை உன்னைத்தேடி
உறவெல்லாம் கலங்கவைத்து.
பயணம் மேற்கொண்டார். தாய் மாமன்
தனியவென்று தனித்துச் சென்ற
மாலாக்குட்டி. நீ அப்பாவோடும். தனா
மாமாவோடும் அமைதியாய்
இருந்திடம்மா.
குடும்பத்தினர்.
Den Haag.Netherland

Milin Impex GmbH
எமது விலைகளை அறிய
எமது இணையத்தளத்தை
பார்வையிடவும்



Web :www.milinimpex.de
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

எமது மகளிர் தின வாழ்த்துக்கள்







# பெண் புலியை வீட்டிலேயே கட்டி வைக்காதீங்க! சிங்கத்துக்கே பாடம் எடுத்த ஜோதிகா!

இனி ஜோதிகாவை முழுவீச்சில் நடிக்க அனுமதிப்பாரா சூர்யா என்ற கேள்வி எழுந்துள்ளது. திருமணம், குழந்தைகள் என்றான பிறகு ஜோதிகா நடிப்பதில் இருந்து கொஞ்சம் தள்ளியே இருந்தார். பின்னர் 36 வயதினிலே படம் மூலம் மீண்டும் நடிக்க வந்தார். ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள படங்களாக தேர்வு செய்து நடித்து வருகிறார்.




ஜோதிகாவை ஹீரோக்களுக்கு ஜோடியாக நடிக்க வைக்க அவரது வீட்டார் விரும்பவில்லை என்று கூறப்பட்டது. இதனால் தான் அவர் மெர்சல் படத்தில் நடிக்க மறுத்தார் என்றும் செய்திகள் வெளியாகின. மேலும் சொந்த தயாரிப்பு நிறுவனத்திற்கு மட்டுமே ஜோதிகா படம் பண்ண வேண்டும் என்று குடும்பத்தார் தெரிவித்ததாகவும் பேசப்பட்டது.

ஜோதிகா முழுவீச்சில் நடிக்க விரும்புவதாகவும், ஆனால் அவரது குடும்பத்தாருக்கு அதில் இஷ்டம் இல்லை என்றும் செய்திகள் வெளியாகின. இந்நிலையில் நாச்சியார் படம் வெளியாகி ஜோதிகாவுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்துள்ளது. சிவக்குமார் சிவக்குமார் நாச்சியார் படம் பார்த்த மாமனார் சிவக்குமார் கூறியிருப்பதாவது, "உண்மையாகவே ஜோதிகாவின் புதியதொரு முகத்தைதான் கண்டு பிரமித்தேன். சூப்பர் போலீஸாக எப்படி நடிக்க வேண்டும் என்று சிங்கத்துக்கே பாடம் எடுத்துள்ளார். (பெண் புலியை வீட்டிலேயே கட்டி வைக்காதீங்க சூர்யா... )" என தெரிவித்துள்ளார்.

மாமனாரே சொல்லியாச்சு இனி ஜோதிகா முழுவீச்சில் நடிக்க சூர்யா அனுமதி அளிப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. அடுத்ததாக வித்யா பாலன் நடிப்பில் ஹிட்டான தும்ஹாரி சுலு இந்தி படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்கிறார் ஜோதிகா. இன்று நயந்தாரா ஜோதிகா இருவரும் தங்களைச் சுற்றி கதை அமைந்த படங்களில் நாளை இவர்கள் தமிழகத்தின் முதல்வர் ஆகவும் ஆசைப்படலாம். கேரளாவில் நயந்தரா நடித்த அறம் வெளிவந்த வேளை, நாளைய முதல்வராக நயந்தராவை ஏற்கவும், தமிழகம் தயங்காது என ஒரு பத்திரிகை செய்திவெளியிட்டது. அவர்களுக்கு தெரியும் தமிழகத்தின் முதல்வர்கள் திரையரங்குகளில்தான் பிறக்கின்றார்கள் என்று.

# நீ பெரிய ஸ்ரீதேவியாக்கும்..

நீ பெரிய ஸ்ரீதேவியாக்கும்.. 70 களின் கடைசியிலும், 80களின் தொடக்கத்திலும் அதிகம் பேசப்பட்ட வசனம் இது. ஸ்ரீதேவி அப்படி ஒரு அழகுப் பாவையாக, அழகோவியமாக அத்தனை பேரையும் வசீகரித்த காலம் அது. அழகாக இருக்கும் பெண்களைப் பார்த்து கிண்டலாக சொல்லப்படும் வார்த்தை இது.

ஒவ்வொரு இளம் பெண்ணுக்குள்ளும் அன்று ஸ்ரீதேவி ஒளிந்திருந்தார். ஸ்ரீதேவியைப் போல தங்களை வரித்துக் கொண்ட பெண்கள் அன்று ஏராளம்.

குறும்பு கொப்பளிக்கும் கண்கள்.. அதில் கோபம், தாபம், சிரிப்பு, கிண்டல், ஏக்கம் என எல்லாமும் நிறைந்து வழியும்.. அற்புத விழிகள் அவை.. யாருக்கும் அத்தனை சீக்கிரம் வாய்த்திராத அம்சம் ஸ்ரீதேவியின் கண்கள். கண்ணும் மூக்கும் உதடுகளும் அவரது பழைய குட மிளகாய் மூக்கு (பாலிவுட்டுக்குப் போன பிறகு அதை ஆபரேஷன் செய்து மாற்றி விட்டார்) இன்னொரு சிறப்பு அவரது நடிப்பில் அந்த மூக்குக்கும் தனி இடம் உண்டு. அதுவும் சேர்ந்து நடிக்கும். அழும்போதும், சிரிக்கும்போதும் அவர் மூக்கு சுளிக்கும்போதும், அத்தனை அழகு.

இயல்பான அழகுடன் அக்காலத்து இளைஞர்களை மட்டுமல்லாமல் பெண்களையும் ஈர்த்தவர் ஸ்ரீதேவி. அழகோடு மட்டுமல்லாமல் அவரது




அறிவுப்பூர்வமான நடிப்பும் அத்தனை பேசப்பட்டது. பெண்களுக்கு உண்மையான அழகே பெண்களுக்கு உண்மையான அழகே, அவர்களது அறிவுதான் என்பதை ஸ்ரீதேவி ஏற்று நடித்த ஒவ்வொரு பாத்திரமும் உணர்த்தின.மீண்டும் கோகிலா அந்த நடிப்பு!!! கிடைப்பாரா இப்படி ஒரு கோகிலா? ( 24.02.2018 ஸ்ரீதேவி மறைவு)




Hückelhoven நகரில்

துரித பணமாற்றுச் சேவை

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்
கடல் உணவுப் பொருட்கள் - மளிகைப்பொருட்கள்
அனைத்தும்
மலிவாகவும் கிடைக்கும்.

Lyca TV



TEMPO MONEY TRANSFER
VALUTRANS MONEY TRANSFER
Ria Money Transfer
MoneyGram money transfer



Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

## EurAsian - Tours

LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...

Tel: 02131 273 692

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Further Str. 156
41462 Neuss

info@eurasian-tours.com

இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!

## Jasmine Silk House

புதிய டிசைன்கள் புதியவரவுகளுடன் புதுவருட

மாபெரும் மலிவு விற்பனை!

16.03.2018 முதல் 14.04.2018 வரை

HP:0173 1937 325

Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen

## ASIA BAZAR

துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...

உரிமையாளர்:
பா.கனேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

Stuttgart நகரில்...

## Pirruntha Silks

தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிடேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்

0170 334 4059

Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976

Photography Video Filming Album Making Graphic Desiging

Your Dreams Comes True

## AKR Visualizers

professional photography & cinematography

BOOK A SESSION NOW AT
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com

## SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main

India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

## StaR - Impex

மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

Asia & Afro Großhandel & Einzelhandel

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de

StaR Impex :
Inh :K.Sivasubramaniam

Rabeena

இலங்கையில் தயாரிக்கப்பட்ட
Rabeena தயாரிப்புக்களின்
யேர்மனிக்கான ஏக விநியோகஸ்த்தர்

Kipper Str.3 44147 Dortmund Germany